# கண்ணன்

15-8-58

13 ந.பை

10



19 SEP 1958 MADRAS

# கண்ணன் தபால்கள்

'நீங்களும் நானும்' என்ற பகுதிக்கு இன்னும் அதிகப் பக்கங்கள் ஒதுக்க வேண்டும். இரண்டு பக்கமும் ஒரு பக்கமும் ஒதுக்குவதால் எங்கள் உற்சாகம் தடைப்படுகிறது. மறுக்காமல் இந்த வேண்டுகோளை மதிப்பீர்களா? —சி. சாமிநாதன், திருவையாறு.

கண்ணனில் வரும் தொடர்கதைகளுக்குத் தொடர்ச்சியான பக்க எண்கள் தரவேண்டுகிறேன். மேலும், ஒரு புதிய பகுதியைத் தொடங்கினுல் இருக்கும் பகுதி ஒன்றை நிறுத்திவிடாமல் இருக்கவும் கேட்டுக்கொள்கிறேன். —என். ராமநாதன், தியாகராயநகர்.

ஜனு யார் என்பதை இனி உங்களால் மறைக்க முடியாது.
—'டிடெக்டிவ்' ஜெர்மன், கொல்லம்.

காளிகோட்டை ரகசியம் விறுவிறுப்பாகச் செல்கிறது.
—சி. கு. சுப்பிரமணியன், மதுரை.

அட்டைப் படம் கவர்ச்சியுடன் விளங்குகிறது. எ. ந. கணபதியின் அறிமுகமும் கவிதையும் பரவாயில்லை. காளிகோட்டை துரித நடை போட்டாலும் வருணனைகள் இன்னும் மிகுதியாக வந்தால் பரவசப்படுத்தும். 'பிரிவுபசாரம்' ஆங்கிலப் பிரசாரமாக இருக்கிறது. ஹாஸ்யம் கலந்து சுவையாக இருந்தாலும் ஆங்கிலச் சொற்களைச் சற்றுக் குறைத்திருக்கலாம். 'ஏழு சகோதரிகள்' போன்ற கதைகளை ஏழாயிரம் தடவை படித்துவிட்டோம்- வேண்டாம் இது போன்ற கதைகள். ஆயிரம் ரூபாய் பரிசுக் கதை போன்ற வேடிக்கைக் கதைகளைச் சிறுவர் உலகம் பெரிதும் விரும்பும். 'இருபதாம் நூற்றுண்டு மேதைகள்' விமரிசனம் வரவேற்பதற்குரிய புதிய முறையில் இருந்தது. மொத்தத்தில் இந்த இதழ் பேஷ்! —பா. அமிழ்தன், பம்பாய்-28.

காளிகோட்டை ரகசியம், ஆக்ராவில் பீர்பால் இரண்டும் அற்புதமாக இருந்தன. —ஓ. வி. எம். ஹாஜா, கோலாலம்பூர்.

கண்ணன் வாரம் ஒரு முறையாக வந்து எங்களை யெல்லாம் களிப்பில் ஆழ்த்த வேண்டும். —க. வே. சுப்பிரமணியன், காளியாபுரம்.

'ஆயிரம் ரூபாய் பரிசுக் கதை' ஐயாயிரம் பெறும். 'அலமுவின் படிப்பு' அற்புதக் கற்பனை! —ஆர். சாந்தா, கோவை.

கடற்புலியை இன்பகரமாக முடித்த ஆர்விக்கும், அழகிய ஓவியங்கள் வரைந்த ஸாமிக்கும் எங்கள் பாராட்டுக்கள்.
—தி. கொ. வேங்கடாசலபதி, திருவாளப்புத்தூர்.

பிரிவுபசாரம் என்ற நாடகம் 'வெரி குட்!'
—பி. பி. எஸ். மணியன், செம்பொன்னுர்கோயில்.

அடுத்த சித்திரக்கதை தற்காலக் கதையாக இருக்க வேண்டும் என்பது என் ஆசை. —கே. சம்பத், ஆண்டர்சன்பேட்டை.

பிறரது பாடலைத் திருடி எழுதுவோரை நினைத்தால் வேதனை உண்டாகிறது. —எஸ். ஏ. கேசவன், கழுகாசலபுரம்.

லெமன் கவிதை வெகு ஜோர். பிரிவுபசாரம் சிரிப்புத் தருகிறது. ஆயிரம் ரூபாய்ப் பரிசுக் கதைக்குப் பத்து ரூபாயாவது பரிசு கிடைக்கும் என்று நம்புகிறேன். —எம். ஏ. அகமத் பஸுலுல்லா, கொச்சி-2.

கேஸி எழுதிய 'புதிரும் எதிரும்' உப்புச் சப்பற்று உள்ளது. 'தோழன் தேவை' எங்கோ, எப்பொழுதோ, எதிலோ படித்துவிட்ட ஞாபகம் வருகிறது. 'லெமன்', 'எ.ந.க.' இருவர் கவிதைகளும் கன ஜோர்! தபால் பகுதிக்குக் குறைந்தது மூன்று பக்கங்களாவது ஒதுக்கவும். கண்ணன் பக்கங்களை அதிகரிக்கவும்.
—கி. சீதாராமன், தோலம்பாளையம்.

மலர் 9 இதழ் 16

15—8—1958

[library stamp]

# குழந்தைகளே!


இந்த இதழ், சுதந்தர தினத்தன்று வெளியாகும் சிறப்பான இதழ். தோற்றத்திலும் உள்ளுறையிலும் அந்தச் சிறப்பைக் காணலாம்.

கண்ணனில் உங்களுக்கு அவசியமான பல விஷயங்களை அவ்வப்போது வெளியிட்டு வருகிறோம். நீங்கள் ரசிக்க முடியாத பகுதிகளையும் அவசியமில்லாதவைகளையும் வெளியிடுவதில்லை. நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் எத்தனையோ இருந்தாலும், உங்கள் கற்பனையைத் தூண்டி, உள்ளத்தை மகிழ்விக்கும் பகுதிகளுக்கே அதிக இடம் கொடுத்து வருகிறோம். இந்த இதழில் இரண்டு புதிய பகுதிகள் வெளிவந்திருக்கின்றன. இந்த இரண்டு பகுதிகளும் சில இதழ்கள் தொடர்ந்து வெளிவரும். இவற்றை நீங்கள் எவ்வாறு விரும்புகிறீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஆகவே உங்கள் கருத்தை ஒளிவு மறைவின்றி எனக்கு எழுதினால் நலமாக இருக்கும்.

ஜூலை 31-ஆம் தேதியோடு போட்டி முடிந்துவிட்டது. ஆனால் மேலும் சிலர் கதைகளும் சித்திரங்களும் அனுப்பி வருகிறார்கள். இவற்றைப் போட்டியில் சேர்ப்பதற்கு முடியாது. சிலர் கண்ணன் அங்கத்தினராக விரும்புவதால் கண்ணன் கூப்பன்களை மட்டும் சில இதழ்கள் வெளியிட எண்ணியுள்ளோம்.

நாளுக்கு நாள் கண்ணனுக்கு ஆதரவு பெருகி வருகிறது. அதற்காக உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—ஆசிரியர்.



கே. சுந்தரேசன்

இளமையும் துடிதுடிப்பும் உள்ள நண்பர் சுந்தரேசனை வாசகர்கள் நன்றாக அறிவார்கள். விறுவிறுப்பும் சுவாரஸ்யமும் மிக்க கற்பனைக் கதைகளை எழுதி கண்ணன் வாசகர்களைக் கவர்ந்தவர் இவர். உயர்தரக் கல்வியை முடித்துக்கொண்டதும், தொழிற்படிப்பில் சிறிது பயிற்சி பெற்று, 'மானோ டைப்' என்ற அச்சு யந்திரப் பிரிவில் ஆங்கிலம், தமிழ் இரண்டும் தெரிந்த ஆப்பரேட்டராகப் பணிபுரிந்து வருகிறார் இவர். நல்ல கதைகளை மனம் திறந்து பாராட்டத் தெரிந்தால்தான், நல்ல கதைகள் எழுதும் திறமை தானாக வரும் என்பதற்கு இவரே ஓர் உதாரணம். நிறையப் படிப்பதும், படித்தவைகளைக் குற்றம் குறைகளைந்து ரசிப்பதும், குறைவாக எழுதினாலும் அது நிறைவாக மனத்தில் பதியும்படி எழுதுவதும் இவரிடம் உள்ள பண்புகள். பெரியவர்களுக்கு ஏற்ற கதைகள் சிலவற்றை இவர் எழுதியிருந்தாலும், சிறுவர்களுடைய முன்னேற்றத்திலேயே அக்கறை கொண்ட இவர் குறுகிய காலத்தில் அவர்களுடைய அன்புக்குப் பாத்திரமாக விளங்கி வருவதில் ஆச்சரியமில்லை. வேறு சில பத்திரிகைகளில் எழுதியிருந்தாலும் கண்ணனில் வெளிவருவதையே பெருமையாகக் கருதும் பலருள் இவரும் ஒருவர்.

# ஹரி விநாயக படாஸ்கர்



ஹரி விநாயக படாஸ்கர், பம்பாய் ஜட்ஜ்களில் ஒருவரான வாமன விநாயக படாஸ்கரின் புதல்வர். இப்போது அறுபத்தாறு வயது நிரம்பியவர். புனாவிலுள்ள ஃபெர்குஸன் கல்லூரியிலும், பம்பாய் சட்டக் கல்லூரியிலும் படித்துத் தேறி, பம்பாய் உயர் நீதி மன்றத்தைச் சேர்ந்த வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார். 1917-ஆம் ஆண்டில் காண்டேஷ் என்ற ஊரில் வக்கீல் தொழிலைத் தொடங்கினார். சில ஆண்டுகளில் தேசீயப் போராட்டம் அவர் மனத்தைக் கவர்ந்தது. காங்கிரஸ் மகாசபையில் அங்கத்தினராகச் சேர்ந்துகொண்டார். பின்னர் அகில இந்திய காங்கிரஸ் அங்கத்தினராகவும் பம்பாய் சட்டசபைக் குழுவின் அங்கத்தினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் பதவியில் மோகம் கொள்ளாதவர் என்பது சட்டசபைக் குழுவிலிருந்து ராஜினாமாச் செய்தபோது விளங்கியது. காந்திஜிக்குத் தடை விதித்ததற்காக இவர் அந்தப் பதவியை உதறித் தள்ளினார். பின்னால் 1937-இலும் 1945-இலும் பம்பாய் சட்டசபைக்கு இவர் இருமுறை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தியாவின் அரசியலைத் தயாரித்த அரசியல் நிர்ணய சபையிலும் இவர் அங்கம் வகித்திருக்கிறார்.

இது தவிர, இவர் பங்கு எடுத்துக்கொள்ளாத கல்வி, சமூக, அரசியல் பொது நிகழ்ச்சிகளே இல்லை என்று கூறிவிடலாம். தேசீயப் போரில் சிறை சென்றிருக்கிறார். பதினைந்து ஆண்டுகள் நகரசபைத் தலைவராகப் பணியாற்றியிருக்கிறார்.

இவ்வாறு தேசீயப் பற்றும் இடைவிடாத சோர்வற்ற உழைப்பும்கொண்ட மகாராஷ்டிர வீரரான ஹரி விநாயக படாஸ்கர் இப்போது மத்தியப் பிரதேசத்தின் கவர்னராகப் பணியாற்றி வருகிறார்.





# முன்னும் பின்னும்

'தமிழ் ஒளி'

பாடம் படியா ஒரு பையன்
பள்ளி செல்லா ஒரு பையன்
மூடன் ஆனான் முன்னாலே!
மூட்டை சுமந்தான் பின்னாலே!

சொல்லைக் கேளா ஒரு பையன்
துள்ளித் திரிந்த ஒரு பையன்
கல்லான் ஆனான் முன்னாலே!
கட்டை சுமந்தான் பின்னாலே!

சோம்பித் திரிந்த ஒரு பையன்
சுற்றித் திரிந்த ஒரு பையன்
தேம்பித் திரிந்தான் முன்னாலே!
தெருவில் நின்றான் பின்னாலே!



# நீங்களும் நானும்

ஆர்வி

**வி. மங்களநாயகி, தஞ்சைபுரி.**

கே: உங்கள் புனைபெயருக்கு என்ன பொருள்?

ப: சொந்தப் பெயர்களுக்கு என்ன பொருளோ, அதுதான்!

கே: எழுத்தாளர் என்றால் புனை பெயர் அவசியந்தானா?

ப: அப்படி ஒன்றும் அவசியமில்லை. ஆசானைப் பரிகசிக்கும் மாணவன், சமூகத்தைப் பரிகசிக்கும் சீர்திருத்தக்காரன், கணவனைப் பரிகசிக்கும் மனைவி, மனைவிக்குப் பயந்த கணவன், தோழர்களைப் பரிகசிக்கும் நண்பர்கள் தன்னையே பழித்துக்கொள்ளும் தன்மானமுள்ளவன் - இவர்களே பெரும்பாலும் புனைபெயரை நாடிச் சூடிக்கொள்கிறார்கள். மற்றும் சிலர் மாறாட்டமான பெயர்களில் உலவுகிறார்கள்.

**ஆர். கே. மாணிக்கம், ராமநாதபுரம்**

கே: பரீட்சைக்கு வரக்கூடிய பாடத்திலிருந்து வரும் கேள்விகளுக்கு விடையளிப்பீர்களா?

ப: வாத்தியார்மீது தீர்த்துக் கொள்ள வேண்டிய வஞ்சத்தை என்மீது சுமத்தித் தீர்க்கப் பார்க்கிறாயா? தற்போதுள்ள பாடப்புத்தகங்களில் பல, வெறும் குப்பைகள். லஞ்சம் கொடுத்து அரங்கு ஏறியவை. அவற்றில் கேள்வி கேட்டால் ஐயோ, நான் விடை கூற மாட்டேன்!

**மணி, மாதவன், வேலூர் (வ. ஆ)**

கே: வீரபாண்டியக் கட்ட பொம்மனைப்பற்றிய கேள்விகளுக்கு ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள்? விடை கூறத் தெரியாதா? விருப்பந்தான் இல்லையா?

ப: அந்தக் கம்பளத்தார் வம்பு கண்ணனுக்கு வேண்டாம் என்று தான் சும்மா இருக்கிறேன். பழங் காலப் பாண்டியர் பெயரை வீணுகப் பாழ்படுத்தக் கூடாது.

**மு. இராஜாபாதர், திருவள்ளூர்**

கே: காந்திஜியின் பெருமைக்கு முக்கிய காரணம் யாது?

ப: அவர் ஒரு தலைமுறை வாழ்வையே, நாகரிகத்தையே வேரோடு கல்லி எறிந்து, தலைகீழாக மாற்றி அமைத்தவர். அதுவே அவருடைய பெருமை. உடல் பலத்தைவிட உள்ளத்தின் பலத்தை உலகறிய உணர்த்தியவர். அதுவே அவருடைய பெருமை. இந்தியப் பண்பே உயர்ந்த பண்பு என்று வாழ்ந்து காட்டியவர். அதுவே அவருடைய பெருமை. சொல்லில் உள்ள சக்தியைச் செயலிலும் காட்டியவர். அதுவே அவருடைய பெருமை. உன்னத வாழ்வுக்குப் பகுத்தறிவு பாதி வழிதான் காட்டும் என்பதை உலகுக்கு நிரூபித்தவர். அதுவே அவருடைய பெருமை.

**கே. லலிதா, பங்களூர் ஸிடி**

கே: அதிருஷ்டத்தில் உங்களுக்கு நம்பிக்கையுண்டா?

ப: நம்பிக்கையுண்டு; ஆனால் அது நமக்கு அடிக்கும் விஷயத்தில் தான் அவநம்பிக்கை அதிகமாய் இருக்கிறது.

**ப. நாராயணன், கோட்டாறு**

கே: பழைய கேரளம் எப்படி இருந்தது?

ப: ஆங்கில ஆட்சி வேரூன்றுவதற்கு முன்பு கேரளம் மூன்று துண்டுகளாகப் பிரிந்திருந்தது.

**ஸி. டி. ராஜாராமன், காஞ்சீபுரம்**

கே: உலகில் இந்தியாவின் மதிப்பு இப்பொழுது நேருஜியினால் உயர்ந்திருக்கிறதா?

ப: இந்தியாவின் மதிப்பு உயர்ந்திருப்பது உண்மைதான், ஆனால் அது நேருஜியினால் மட்டுமல்ல. புராதனமான இந்தியாவின் ஆத்மீக உயர்வைப் பிற நாட்டவர் இப்பொழுதுதான் மெல்ல மெல்லப் புரிந்துகொள்ள வசதியேற்பட்டிருக்கிறது. இதுவே நேருஜியின் மதிப்பையும் உயர்த்தியிருக்கிறது. வருந்தத்தக்க மற்றொரு விஷயம். இந்தியாவின் கடன் மதிப்பும் உயர்ந்திருப்பதுதான்!




## 22. அடிக்குமிழி வழியே....

நெடுமாறன் இருளிலும் குளிரிலும் நின்று சற்றுநேரம் கோட்டையின் மேல்தளத்தையே பார்த்துக்கொண்டு நின்றான். அது கூதிர்காலத் தொடக்கமாதலால் லேசாகப் பனி இறங்கிக்கொண் டிருந்தது.

திடீரென்று கோட்டைமீது நின்ற உருவம் ஓங்கிய குரலில் கூவியது:

''யாரோ ஒரு பிச்சைக்காரன் வருகிறான்! யாராக இருந்தாலும் வெளியே விடாதே! கோட்டைக்குள்ளேயே சுருண்டு கிடக்கட்டும். பொழுது போவதற்கு முன்னேயே வெளியே போவதற்கு என்ன?''

அங்கு வந்து நின்றவர்கள் கோட்டை அதிகாரிகளாக இருக்கவேண்டும் என்று நெடுமாறனுக்குத் தோன்றியது. ஆகவே இப்பொழுது உள்ளே போக முயல்வது உசிதமல்ல என்று ஒரு மரத்திலே சாய்ந்துகொண்டு நின்றான்.

நேரம் போய்க்கொண் டிருந்தது. பனி கலந்த நீலவானில் விண்மீன்கள் மங்கிய ஒளி காட்டிக் கண்களைச் சிமிட்டின. அந்த இருளிலே பாறைகளால் எழுப்பிய அந்தப் புராதனமான கோட்டை கரிய பெரிய பூதம் ஒன்று நிற்பதுபோல் காட்சி தந்தது. இத்தனை அற்புதமான கோட்டை, அழகும் உறுதியும் வாய்ந்த கோட்டை, இன்று ஒரு கொடுங்கோலனுக்குக் காவலாக நிற்கிறதே என்பதை எண்ணியபோது, நெடுமாறன் நெஞ்சு ரோசத்தால் விம்மியது. இந்தக் கோட்டைக்குரியவன் நாடோடியாகத் திரியவும், இந்தக் கோட்டையின் சிறையிலே கைதியினும் கேவலமாக இருக்கவேண்டிய ஒருவன் அரசனாகவும் இருக்க நேர்ந்துவிட்டதே என்று எண்ணி மனம் பொருமி நின்றான் அவன்.

கோட்டைமீது சற்றுமுன் காணப்பட்ட உருவம் இரண்டையும் இப்போது காணவில்லை. ஆனால் அகழியின் குளிர்ந்த நீரிலே ஏதோ சரசரவென அலைந்துவருவதுபோல் தோன்றியது.

அடர்ந்த இருளில், புதர்கள் மண்டிய பகுதிகளில், அவனுல் எதையுமே பார்க்கக்கூட முடியவில்லே. இருந்தாற் போலிருந்து காலருகே இலேகள் சலசலத்தன. யாரோ இரைக்க இரைக்க, பெருமூச்சு விடுவது கேட்டது. நெடுமாறன் சரேலென்று எச்சரிக்கையாக நின்ருன். முக்கல்.... முனகல்.... புதர்களி லிருந்து கரியஉருவம் ஒன்று மெல்லப் புரள்வதுபோல் தெரி யவே, நெடுமாறன் மேலும் கூர்ந்து நோக்கினுன். ஆம்; அது ஒரு மனித உருவந்தான். அந்த உருவம் மெல்ல எழுந்திருப் பதற்குள் நெடுமாறன் அதன்மீது பாய்ந்து இறுகக் கட்டினுன்.

''ஆ!'' என்று மெதுவாக அலறியது அந்த உருவம். உடலெல்லாம் சொட்டச் சொட்ட நனேந்திருந்தது. மேல் மூச்சும் கீழ்மூச்சும் வாங்கியது. தாடியும் மீசையும் அடர்ந்த அந்த உருவம் வயதான முதியவன் என்பதை அறிந்துகொண் டான் நெடுமாறன். எனவே அந்த மனிதனே மெல்லத் தாங்கிக் கொண்டு மங்கிய ஒளி தெரிந்த மரத்தருகே நடத்திவந்தான்.

அந்த இருளிலும் கிழவனுடைய கண்கள் பிரகாசமாக ஒளி வீசின. மூச்சு இரைத்தாலும் அந்த மனிதன் நெடுமாறனே உற்றுக் கவனித்தான்.

''யார் நீ? இங்கே என்ன செய்கிருய்?'' என்ருன் நெடு மாறன், அடிக்குரலில்.

''நான்..நான்..வந்து..இருளில் கண் தெரியாமல் அகழி யில் விழுந்துவிட்டேன்..முதலேக்கு அகப்படாமல் கரையேறிய பாடு பெரும் பாடாகிவிட்டது!'' என்று திக்கித் திணறிக் கூறி ஞன் அந்தக் கிழவன்.

''ஓய் - பெரியவரே! என்ன கதை அளக்கிறீர்? மரியாதை யாக நடந்ததைச் சொல்லும். நானும் உம்மைப் போலத்தான்.. ..பயப்படாமல் கூறும்!'' என்ருன் நெடுமாறன்.

''அப்படியா..உண்மையாகவா? நீயும் என்னேப்போல் ஒரு பிச்சைக்காரன்தாஞ?'' என்று பல்லெல்லாம் பளிச்செனத் தெரிய, வியப்போடு கேட்டான் அந்தக் கிழவன்.

''இல்லே, பெரியவரே! இல்லே. நான் பிச்சைக்காரன் இல்லே. ஆனுல் ஒருவிதத்தில் உன்னேப் போலத்தான் நானும் இருக்கிறேன். கோட்டையிலிருந்து நீ தப்பித்து வெளியில் வந்த வன்; நான் எப்படியாவது உள்ளே நுழையப் பார்க்கிறவன்! இவ்வளவுதான் வித்தியாசம்!'' என்ருன் நெடுமாறன்.


கிழவன் ஆச்சரியத்தோடு மிரளமிரள விழித்து, ''நான் தப்பி வந்தது உனக்கு எப்படித் தெரிந்தது, தம்பி?'' என்ருன்.

''சொட்டச் சொட்ட நனேந்த ஆடைகளேப் பார்த்தாலே தெரியவில்லேயா? சற்றுமுன் நின்று கத்திஞனே - உன்னேத் தானே வெளியில்விட அவன் மறுத்தான்?''

''ஆமாம். இந்தக் கிழ மங்கனிடமா அவன் வேலே பலிக்கும்? கோட்டைக்குள்ளே மாட்டிக்கொண்டு விட்டால், நான் எப் படிக் குடிசைக்குப் போய்ச் சேருவேன்? எனக்காக அந்தக் குழந்தை அழுது, செத்துப்போகுமே!'' என்ருன் கிழவன்.

''சரி; எப்படித் தப்பி வந்தாய்? அந்த வழியைச் சொல்!'' என்ருன் நெடுமாறன்.

''இங்கே வா, தம்பி! ஆ..அதோ கோட்டை வாயிலுக்குப் பக்கத்திலே கீழ்க் குமிழிப் பாலம் தெரிகிறதா? அதன் வழியாகத்



தான் நான் அகழிக்கு வந்து நீந்தி வந்தேன். ஆனால் நான் கிழவன். செத்தாலும் கவலையில்லை. நீ போவது கூடவே கூடாது. ஏன் தெரியுமா? அகழியிலே ஆறு ஏழு பெரிய முதலைகள் உள்ளன. மேலும் உட்புறத்திலே காவலாளிகள், கையில் பந்தத்துடன் காவல் புரிந்து வருகிறார்கள். அதனால் அந்த எண்ணத்தை விட்டுவிடு. காலையில் பார்த்துக் கொள்ளலாம்!'' என்றான் கிழவன்.

நெடுமாறன் அந்தக் கிழவனுடைய பேச்சைக் கேட்டு மகிழ்ச்சியுற்றான்.

''பெரியவரே - இதோ அஞ்சு கழஞ்சுப் பொன்! உமக்கு நன்றி. உம்முடைய பேரக் குழந்தை உமக்காகக் காத்திருக்கும்..போய்வாருங்கள்!'' என்று சொல்லிவிட்டு, நெடுமாறன் அகழியில் இறங்கிச் சென்றான்.

''தம்பி! எச்சரிக்கையாகப் போ! ஜாக்கிரதை!'' என்று கிழவன் சொல்லிக்கொண்டேயிருந்தான். நெடுமாறனோ, காவலாளிகள் கண்ணில் படுவோமோ என்று கவலைப்படாமல், ஜில்லெனக் குளிர்ந்த தண்ணீரில் தாவிக் குதித்துவிட்டான்.

நீர்க்குமிழிப் பாலம் காட்டுமரச் சட்டங்களால் உறுதியாகக் கதவுபோல் அமைக்கப்பட்டிருந்தது. அகழித்தண்ணீர் கோட்டையின் உட்புற வழியாக அதன் மூலமே வருவதாகத் தோன்றியது. அந்த அடிக்குமிழி வழியாக யாரும் நுழைந்து கோட்டைக்குள்ளே வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் அதன் வாயிலை அப்படி இறுக மூடியிருந்தார்கள்.

நெடுமாறன் இடையிலிருந்த குத்துவாள் ஒன்றைக் கையிலே உருவியவாறு அகழியில் ஓசைப்படாமல் நீந்தி அந்தக் குமிழி வழியை அடைந்தான். காலிலே ஏதோ சரக்கென முள் குத்துவதுபோல் இருந்தது. அடுத்த கணம் ஏதோ 'லபக்' கென்று கவ்வுவதுபோல் அவன் உணர்ந்தான். ஒரு நொடியும் தயங்காமல் கை வாளால் காலைக் கவ்விய பிராணியின் வாயைக் கிழித்துவிட்டு, காலை விடுவித்துக்கொண்டான்.

அந்தக் காட்டுமரக் கதவில் கிழவன் எந்த வழியாக நுழைந்து வந்திருக்க வேண்டுமோ, அந்த வழியில் ஒரு சட்டம் முறிந்து, ஓர் ஆள் நுழைவதற்கு ஏற்றவாறு இடம் இருந்தது. நெடுமாறன் அதனுள் நுழைந்து குகை வழிபோல் இருண்ட நீரிலே மெதுவாகக் கோட்டையின் உட்புறத்தை அடைந்தான். அவன் தண்ணீரைவிட்டு, படிக்கட்டுப் போல் இருந்த இடத்தை அடைந்தபோது, பளிச்சென வெளிச்சம் தெரிந்தது.

அதைக் கண்டதும் நெடுமாறன் திடீரெனப் பாய்ந்து கோட்டைச் சுவரோரமாக ஒண்டிக்கொண்டு நின்ருன்.

''இரு, இரு..யாரோ படிக்கட்டுத் தண்ணீரில் பாய்ந்து ஓடுவதுபோல் சத்தம் கேட்கிறதே!'' என்று ஒரு குரல் அவசரமாக ஒலிப்பதைக் கேட்டு நெடுமாறன் மேலும் ஒடுங்கியவாறு முன்னறிவோடு நின்ருன்.

டக் டக் டக்!

தீப்பந்தம் வர வரப் பிரகாசமாக ஒளி வீச, இரு வீரர்கள், பயங்கர ஒலிகாட்டி அந்தப் படிக்கட்டை நெருங்கி வந்தார்கள். பிறகு, மெதுவாக ஒவ்வொருபடியாக இறங்கி வந்தார்கள். கைப்பந்தத்தைத் தூக்கிப் பிடித்து நாலா புறமும் நன்ருகப் பார்த்தார்கள்.

நெடுமாறன் நெஞ்சம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது. அச்



சம் என்பதே உணராத அவன் மனத்தில் ஒரு படபடப்புத் தோன்றியது.

''அதோ பார்!'' என்று ஒருவன் பயங்கரக் குரலில் நெடுமாறனைச் சுட்டிக் காட்டிக்கொண்டே கூவினன்.

''பாரா வீரர்களே — ஓடிவாருங்கள்!'' என்று இருவருமாகக் கத்திக்கொண்டே சுவரோடு பதுங்கி நின்ற நெடுமாறனைநோக்கி, வேலையும் வாளையும் ஓங்கியவாறு நெருங்கி வந்தார்கள்.

நெடுமாறன் அந்த இடத்தைவிட்டு அசையவில்லை; ஓடவும் முயலவில்லை. அப்படியே அடித்து வைத்த சிலைபோல, வைத்த கண் வாங்காமல் உறுதியாக நின்றான்.

ஒருவனுடைய வேல் அவனை நோக்கிப் பாயத் தயாராக உயர்ந்தது. மற்றொருவனுடைய வாள் அவன் தலைக்கு மேலே ஓங்கியது. நெடுமாறன் வேலை எறிய வந்தவன் முகத்தைக் கட்டி ஒரு குத்துவிட்டான். அந்த வேல் வீரன் அடியற்ற மரம்போல் மல்லாந்து வீழ்ந்தான். (தொடரும்)





# காலம் சொல்லும் கதை

**கோவி. மணிசேகரன்**

என் பெயர் காலம்.

இப்படித்தான் சிறுவர்களான - இனி வரும் புத்துலகச் சிற்பிகளான உங்களிடம் என்னைப் பற்றி அறிமுகப்படுத்திக் கொள்ளும் 'காலம்' எனக்கே வந்துவிட்டது.

'ஞாலம் போகும், காலம் நிற்கும்' என்று எண்ணி, எனக்கு நானே இறுமாந்த சமயம் ஒன்றுண்டு. ஆனால், 'காலம் போகும், வார்த்தை நிற்கும்' என்ற பழமொழியை உங்கள் நாடு உண்டாக்கியது. அப்போதும் நான் அதிர்ந்து காணப்படவில்லை. இப்போது அதிர்ந்தேன்; அலறினேன்; அடங்கி விட்டேன். ஏனென்றால் வார்த்தை, வாக்கியமானது; வாக்கியம், காவியமானது; காவியம் உங்களுடைய கண்களைத் திறந்துவிட்டது!

விஞ்ஞானம், வரலாறு என்ற விநோதக் கூற்றுக்களுக்கு உங்களைப் பாத்திரமாக்கியது. இத்தனைக்கும் காரணம் நான் செய்த தவறுதான். மனிதனைப் படைத்த நான் கலையுணர்வையும் சேர்த்துப் படைத்திருக்கக்கூடாது. அந்த உணர்வு இன்று என்னைத் தலை வணங்கச் செய்துவிட்டது.

காலத்தை மீறக்கூடிய மனிதர்கள் அரும்பி விட்டனர். காலத்தையே ஆட்டிப் படைக்கும் மனிதர்களும் தோன்றிவிட்டனர். இனி நான் முன்புபோல், ஏதேனும் குறும்புத்தனம் செய்தால் அதைத் தடுக்க வல்லவர்களும் இருக்கிறார்கள்; என்னை ஏளனம் செய்து அழியாக் காவியம் இயற்றவல்லவர்களும் இருக்கிறார்கள். இதை நான் அநுபவித்தேன் - அநுபவிக்கிறேன்.

காலம், காலம் என்று ஓயாமல் அந்நாளைப் பெரியவர்கள் பேசினர், எனக்குப் பயந்து நடந்தனர்.

இன்று......

அந்தப் பேச்சில்லை.

இலக்கியத்தைப்பற்றி ஒரே பேச்சு! உலகிலேயே முதலில் தோன்றிய மொழி என்பது பற்றி வாதம்! தமிழர்களாகிய நீங்களும் முதற் சங்க காலத்தைப்பற்றிய ஆராய்ச்சியில் மூழ்கி, அந்தக் கால அட்டவணையை, பூதத்துவ முறையில் கவனிக்கத் துவங்கிவிட்டீர்கள். இவை மட்டுமா?

உலக மாவீரர்களென கருதப்பட்ட கிரேக்க நாட்டு மாவீரன் அலெக்ஸாந்தரையும் மங்கோலிய மாவீரன் செங்கிஸ்கானையும் பிரஞ்சு நாட்டு மாவீரன் நெப்போலியனையும் முன்னிறுத்திய வரலாற்று வல்லுநர் கண்களில், கரிகாலன் எங்கே சென்றான்? இராஜராஜசோழன் எப்படி மறைந்தான்? சடையவர்மன் குலசேகரப் பாண்டியன் படவில்லையா? ஒருவேளை இவர்கள் கடல் கடந்து சென்று போரிட்ட இடமெல்லாம் இலங்கையும், காழகமும் (மலேயா)

மற்றும் சில கீழ்த்திசைத் தீவுகள் தாம் என்று ஒதுக்கித் தள்ளி விட்டார்களா?

இப்படி எல்லாம் பொங்கி எழுந்து கேட்கும் அளவிற்கு நீங்கள் புறப்பட்டு விட்டீர்கள். இத்தனையும் கேட்டுவிட்டு, கடைசியாக நீங்கள் இருசொற்களைச் சேர்க்கிறீர்கள். அவைதான் இன்று வரை என்னை மகிழ்விக்கின்றன. நானும் மனம் திறந்து கதை சொல்ல ஆசைப் பட்டேன்.

அந்த இருசொற்கள் என்ன வென்று கேட்கிறீர்களா?

''காலம் வரும்!''

இதோ வந்து விட்டேன்....

பழங்குடி மக்களாகிய தமிழர்கள் மரபில் வந்த தம்பி, தங்கைளை ஒரு பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்னே அழைத்துச் சென்று, மன்னர் மரபுகளைத் தொடர்ந்து சொல்ல விரும்புகிறேன். இதை, நான் சொல்லும் கதை என்று நீங்கள் நினைத்தாலும், நான் மட்டும் நீங்கள் என்னைப்பற்றிச் சொல்லும் கதையாகவே நினைத்துப் பெருமையைச் சிறிதே வர வழைத்துக் கொள்கிறேன்.

'பாரதம்' - என்ற இனிய தமிழ்ச் சொல்லுக்குக் காரணமாய் விளங்கிய பரதவர்களாம் பாண்டியர்களுக்குத் தலையான பீட மேற்று நிற்கிறார் ஆழி வடிம் பலம்ப நின்ற பாண்டியனார்!

உலகிலேயே நிறைய இலக்கியங்களைப் பெற்ற மொழிகளுள் தமிழும் ஒன்று. தமிழ் இலக்கியங்களுள் என்னால் (கடலைப் பொங்கச் செய்து) அழிக்கப்பட்டவை போக எஞ்சியவைகளில் பழமைக் கோலத்துடன் விளங்குகிறார் நெடியோன் - வடிம்பலம்ப நின்ற பாண்டியர்.

'கடலைப் பொங்கச் செய்து' என்று குறிப்பிட்டதும் தங்கத் தமிழ்த் தம்பி, தங்கைகள் என்மீது கோபப்பட வேண்டாம். அதற்காக நான் மன்னிப்பும் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இருமுறை நான் அவ்வாறு செய்திராவிடில் ஆராய்ச்சியாளர்களுக்குப் பல துணைகள் கிடைத்திருக்கும். நீங்களும் பல வழிகளில் முன்னேறி இருக்கக் கூடும்! ஏன்? உலகிலேயே தலை நிமிர்ந்த உன்னத பீடத்தையும் அடைந்திருக்கக் கூடும்.

கடலைப் பொங்கச் செய்ததற்கும் காரணம் உண்டு.

கடைச் சங்க காலத்திற்கு முடிவிலும், இடைச் சங்க காலத் திற்குத் துவக்கத்திலும் வாழ்ந்த



இந்தப் பெருமன்னன் பல கடல் கடந்த நாடுகளைக் கைப்பற்றினர். அப்படிக் கைப்பற்றிய நாடுகளின் கடற்கரைப் பாறைகளில் தம்முடைய பாதங்களைச் செதுக்கச் செய்தார். அந்தப் பாதங்களைத் தினம், தினம் கடல் தன்னுடைய அலைக்கரங்களை நீட்டிக் கழுவ வேண்டுமாம்!

எப்படி இருக்கிறது?

ஆண்டு தோறும் கடல் தெய்வத்திற்கு விழா நடத்தும் இம்மன்னர் கடலை இவ்வாறு பழிக்கலாமா? அந்தப் பழிப்புக்குத் தக்க தண்டனையை அளித்ததில் என்ன தவறு இருக்கமுடியும்?

இம்மன்னர் பஃறுளி என்ற ஆறு ஒன்றை வெட்டினர். "முன்னீர் விழவின் நெடியோன், நன்னீர்ப் பஃறுளி மணலிலும் பலவே!" என்ற பாடலைப் புறநானூற்றில் நீங்கள் பிற்காலத்தில் படிக்கும்போது, முன்னீர் விழாவைப்பற்றியும், பஃறுளி ஆறு வெட்டிய கதையைப்பற்றியும் தெரிந்து கொள்வீர்கள். இது மட்டுமல்ல, தமிழுக்கே மூத்த இலக்கண நூல் எழுதிய தொல்காப்பியர் என்பவரைப்பற்றியும் தெரிந்துகொள்ளப் போகிறீர்கள்.

இந்தப் பாண்டியர் நல்ல உயரமான உடல் கட்டு வாய்ந்தவர். அதனால்தான் இவரைப் புலவர்கள் நெடியோன் என்று அழைத்தார்கள் போலும்.

முது குடுமிப் பெருவழுதி என்ற பாண்டியன் அடுத்து காணப்படுகிறார். இவர் பல யாகங்களைச் செய்தவர். அதனால்தான் இவரைப் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்று அழைக்கலாயினர். இவர் ஆயிரம் யாகங்களைச் செய்து புகழ் பெற்றார். இவர் ஆட்சியில் பல கற்றறிந்த புலவர்களை ஆதரித்தார். மக்களிடம் அன்புடன் பழகினர். சிவபெருமானிடம் சீரிய பக்தி கொண்டவர். பெரியவர்களை மதித்து நடத்தியவர். இந்தத் தகவல்களைக் கூறும் நெட்டியம்மையார் என்ற பெண்புலவர் பாடிய பாடலை நீங்கள் பிற்காலத்திலே படிக்கப் போகிறீர்கள். அப்போது பெருமை கொள்வதோடு மட்டும் நிற்காமல், அதன்படி நடக்கவும் போகிறீர்கள்.

பெருவழுதி பாண்டியர், வாரி முடிக்கத்தக்க அழகிய குடுமியைப் பெற்றிருந்தார். அந்தக் குடுமி அவருக்கு அழகுக்கு அழகு செய்தது. அதனால்தான் அவரை 'முதுகுடுமி' என்றழைக்கலாயினர்.

இந்தப் பாண்டியர், பகைவர் நாட்டில் படையெடுக்கும் முன்னம், அந்நாட்டில் பறையறிவிக்கச் சொல்வார். "அந்தணர்கள், பெண்கள், நோயாளிகள், பிள்ளைகளைப் பெறுதவர்கள், ஆகியோர் தங்களைக் காத்துக் கொள்ள எங்கேனும் சென்றுவிடுங்கள். ஏனென்றால், நாங்கள் இந்நாட்டின்மீது படையெடுக்கப் போகிறோம்" என்பதே பறையறிவிப்பின் சாரமாகும்.

ஆகா! இக்கால அணுகுண்டையும், நீர்வாயுக் குண்டையும் நினைக்கும்போது, அக்காலத்திய ஒழுக்கமான போர் முறையை ஆயிரம் தடவைப் புகழலாம் அல்லவா? ..




தம்பி: அக்கா, உன் பச்சைப் புடைவையின் முந்தாணியில் கொஞ்சம் வெட்டிக்கொள்ளலாமா? தேசியக் கொடி தயாரிக்கத் தேவை.



# வாத்தியார் வாஞ்சி

ஜி. ஜயராமன்

மணி 'கணகண' வென அடித்தது.

வகுப்பறைக்குள் நுழைந்தார் வாத்தியார் வாஞ்சி. பையன்கள் எல்லோரும் 'கப் சிப்' என்று வாலைச் சுருட்டிக்கொண்டு உட்கார்ந்தார்கள். கடைசிப் பெஞ்சியில் மூன்றாவது ஆள் (இல்லை-வால்) விச்சு அவசர அவசரமாக நோட்டை எடுத்துக்கொண்டு வாத்தியாரின் முகத்தை வரைந்து அதில் மீசை வைப்பதில் ஈடுபடலானான்.

வாத்தியார் பாடம் நடத்தலானார். லட்சிய வாழ்வு வாழ்ந்த ஒரு மனிதரின் வாழ்க்கையைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்தது அந்தப் பாடத்தில். வாஞ்சி அதை அழகாக விவரித்துப் பாடம் சொல்லலானார்:

''லக்ஷ்யவாதிக்கு ஒரு சோதனை. அடுக்கடுக்காகக் கஷ்டங்கள் அவனைத் துரத்தின. கையில் ஒரு சல்லி இன்றி அவன் திண்டாடுகிறான். யாருமே அவனுக்கு உதவி செய்ய முன்வரவில்லை. அந்த நிலையில் அவன் நண்பன் பொருள் அவன் கையில் கிடைக்கிறது. தன் கஷ்டங்களை மறந்து லக்ஷ்யத்தையே முன் வைத்து, அவன் தனக்கு உதவி செய்ய மறுத்த அந்த நண்பனிடம் அந்தப் பொருளைச் சேர்த்து விடுகிறான்!'' இந்தக் கட்டத்தில் வாத்தியார் வாஞ்சி பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார்.

''மாணவர்களே! நல்ல குணம் என்பது அருமையாகப் பேணி வளர்க்க வேண்டியதொன்றாகும். எவ்வளவோ பிரயாசையின் மேல் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களைக் காக்க வேண்டியது அது. நல்ல குணங்களே விலை மதிக்கமுடியாத சொத்துக்கள்.

''சந்தர்ப்பம் லக்ஷ்யத்தை விட்டு நம்மை வழுவச் செய்யும். சந்தர்ப்பத்திற்குப் பயந்து லக்ஷ்யத்தை விடுபவன் மனிதனல்ல. மாணவர்களே! வருங்காலம் உங்களைப் பொறுத்ததே. நீங்கள் நல்ல குணங்களை வளர்க்க வேண்டும். பிறர் பொருளுக்கு ஆசைப்படுவது மிகவும் கீழ்த்தரமான செய்கை.

''இந்தக் கதையில் வரும் மனிதரைப் பாருங்கள். அளவில்லாத கஷ்டங்கள் இருந்தும் பிறர் பொருளுக்கு ஆசைப்படாமல் அதை உரியவனிடம் சேர்த்து விடுகிறார். இதைப்போன்ற மன உறுதி நமக்கெல்லாம் வேண்டும்.

''மனித வாழ்க்கையில் நாம் சாதிக்கக் கூடியது ஒன்றே ஒன்றுதான். ஆசைகளை அடக்கி, பிறருக்குத் தீமை செய்யாமல், பிறர் பொருளுக்கு ஆசைப்படாமல் இருக்க முடிந்தால் அதுவே பெரும் சாதனை.'' ஆவேசம் வந்தவர் போல வாஞ்சி பேசிக்கொண்டே போனார். கண கணவென்று அடித்த மணி அவர் பேச்சுக்கு

ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. வாஞ்சி வகுப்பை முடித்துக் கொண்டு வெளியே சென்றார். பையன்களெல்லாம் கூச்சல் போட்டுக்கொண்டு வெளியேறினார்கள். "சரியான பைத்தியம் வந்து சேர்ந்தது நமக்கு! இதற்கேற்றாற்போல் ஒரு புத்தகம் எழுதினானே, அவனைச் சொல்!" என்றான் சேது.

"நம்மைக் கொண்டு வந்து இதன்கிட்ட விட்டார்களே, அந்தக் கஷ்டங்களை நினைத்தால்.." என்று இரண்டு சொட்டுக் கண்ணீரைச் சொட்டினான் மணி.

"எவனோ ஓர் அசடு பணம் இல்லாமல் திண்டாடினானும். அதிருஷ்டவசமாகக் கைக்குக் கிடைத்த பணத்தையும் அவனிடமே கொடுத்துவிட்டு நாசமாகப் போனானும். இதற்கு ஒரு மணி நேரம் கொலை. அந்தப் பிரசங்கத்தைக் கேட்டு முடிப்பதற்குள் நூறு தடவை எமதர்மபுரிக்குப் போய் வந்துவிடலாம்" என்றான் சேது. "ஏது, நம்ம விச்சு வாயே திறக்கலையே! என்னப்பா, விஷயம்?" என்று விச்சுவின் வாயைக் கிளறினான் மணி.

"அட சரிதாம்பா! அவர் தான் கடமையை நினைத்துக் கத்தறார்னா, நீங்க எதற்கு இப்படி விவாதிக்க வேணும்? அவர் கடமை வகுப்பிலே வந்து கத்த வேண்டியது. நம் கடன் வகுப்பிலே தூங்க வேண்டியது..." என்று முடித்தான் விச்சு. பையன்கள் எல்லோரும் தங்கள் வழியே சென்றார்கள். விச்சு எல்லோருக்கும் பிந்தினான். முன்னே சென்ற பையன்கள் எல்லோரும் கண்ணுக்கு எட்டிய தூரம் சென்று மறைந்து விட்டார்கள்.

விச்சு நிதானமாக அசைந்து அசைந்து போய்க்கொண்டிருந்தான். பள பளவென்று எதிரே ஏதோ மின்னிற்று. விச்சு குனிந்து அதை எடுத்தான். அது ஒரு மணிபர்ஸ்! 'எஸ். கோபலன்' என்று அதில் பெயர் எழுதி இருந்தது.

விச்சு சுற்று முற்றும் பார்த்தான். ஒருவரும் காணப்படவில்லை. "உம். கோபு பயலுடையது தான் இது. இருக்கட்டும் சொல்கிறேன்." விச்சு மணிபர்ஸைத் திறந்தான். ஓர் ஐந்து ரூபாய் நோட்டும் சில்லறையும் இருந்தன. அப்படியே மூடி, சட்டைப்பைக்குள் பத்திரப் படுத்திக்கொண்டு மேலே நடந்தான்.

"ஸார்! காலையில் பத்து ரூபாய் கொண்டு வந்து சம்பளம் கட்டினேன். மீதியைப் பர்சில் போட்டு, சட்டைப் பையில் வைத்திருந்தேன். இப்போது பையில் பர்ஸைக் காணவில்லை. எங்கப்பா கொடுக்கும் போதே சொன்னார். காணவில்லை என்றால் கொன்னுப் போட்டுவிடுவார்" என்று அழமாட்டாக் குறையாகச் சொன்னான் கோபு. "பர்ஸை யாராவது எடுத்திருந்தால் கொடுத்துவிடுங்கள். யார் எடுத்தது?" என்று கேட்டார் வாத்தியார். 'நானில்லை, நானில்லை' என்று பல குரல்கள் எழுந்தன.

பர்ஸின் விவரங்களை வாத்தியார் விசாரித்தார். சுற்றுப்புறத்தில் எல்லாம் தேடினார்கள். விச்சுவே முன்னால் எங்கும்

---

## கண்ணன் கழகம்
### அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ........................

விலாசம் ........................

........................

பிறந்த தேதி ...............

(தேதி, மாதம், வருஷம்

சோதனை போட்டான். எங்கும் கிடைக்கவில்லை.

கோபு கண்ணில் நீர் வழிய வீட்டிற்குப் புறப்பட்டான். விச்சு அவனைத் தேற்றி அவன் வீடுவரை கொண்டு போய் விட்டுவிட்டுத் தன் வீட்டிற்குச் சென்முன்.

மாலை நேரம். சூரியன் அஸ்தமித்துவிடுவது என்ற ஒரே முடிவுடன் மேல் கடலின் உள்ளே ஆழ்ந்துகொண் டிருந்தான்.

பார்க்கில் 'ரேடியோ' தன் கடனுக்காக ஏதோ அலறிக்கொண்டிருந்தது. அங்குமிங்குமாகச் சிலர் உட்கார்ந்து பேசிக்கொண் டிருந்தார்கள். விச்சுவும் அவன் தகப்பனும் ஒரு புறமாக உட்கார்ந்திருந்தார்கள். விச்சுவின் தந்தை ரேடியோவில் நடந்து கொண்டிருந்த சப்த ஜாலங்களைக் கேட்பதாகப் பாவனை செய்துகொண்டிருந்தார். விச்சு தான் கண்டெடுத்த புதையலுக்கு நாளை நண்பர்களோடு வாங்கிச் சாப்பிடப் போகும் பாதாம் அல்வாவைக் கற்பனையில் கண்டு ரசித்துக் கொண்டிருந்தான்.

வாஞ்சி அந்தச் சமயம் அங்கே வந்தார். விச்சுவின் அப்பாவின் பக்கத்தில் உட்கார்ந்தார். இருவரும் பல விஷயங்கள்பற்றிப் பேசினார்கள். விச்சுவின் சாமர்த்தியம், கெட்டிக்காரத்தனம் எல்லாம்பற்றி ரொம்பப் புகழ்ந்து, கடைசியாக, ''ஸார், ரொம்ப முடையாக இருக்கிறது. வீட்டில் குழந்தைக்கு மருந்து வாங்கவேண்டும். ஒரு ஐந்து ரூபாய் இருந்தால் கைமாற்ருகக் கொடுக்கிறீர்களா? மாதம் பிறந்ததும் சம்பளம் வாங்கித் தந்து விடுகிறேன்'' என்ருர். குரலில் ஓர் ஏக்கம், ஒரு கெஞ்சல்.

பணம் என்ற வார்த்தையைக் கேட்டதும் விச்சுவின் அப்பா துள்ளிக் குதித்தார். ''மன்னிக்க வேண்டும். தற்சமயம் என்னிடம் நயாபைசாகூட இல்லை. உங்களுக்கு உதவி செய்ய முடியவில்லையே என்று வருந்துகிறேன்'' என்று சொல்லிவிட்டு விச்சுவுடன் அந்த இடத்தைவிட்டு நழுவினுர். சற்றுத் தூரம் சென்றதும் பின்னுல் யாரோ கைதட்டி அழைப்பது போல இருந்தது. விச்சுவின் அப்பா தயங்கி நின்ருர். பின்னுல் வாஞ்சி அவரை நோக்கி வேகமாக வந்துகொண் டிருந்தார். ''இதேதடா சனியன்! நம்மை விடாது போலிருக்கே!'' என்று முணு முணுத்தார் அப்பா.

''ஸார், இதைத் தவறுதலாக விட்டுவிட்டு வந்துவிட்டீர்களே!'' என்று சொல்லி ஒரு மணிபர்ஸை



நீட்டினார் வாஞ்சி. மௌனமாகப் பர்ஸை வாங்கினார் விச்சுவின் அப்பா. அவர் மனத்தில் ஒரே குழப்பம். ''தொகை சரியாக இருக்கிறதா என்று பார்க்கவில்லையே'' என்றார் வாஞ்சி. விச்சுவின் அப்பா கவனித்தார். தொகை அப்படியே சரியாக இருந்தது. ''சரியாக இருக்கிறது'' என்றார். அவர் குரலில் ஜீவனில்லை. ''சரிதான், வருகிறேன்.'' வாஞ்சி திரும்பிப் போய் விட்டார்.

விச்சுவின் மனத்திலும் அவன் அப்பாவின் மனத்திலும் வெவ்வேறுவித புயல் வீசிற்று.

'மனிதன் என்ன இருந்தாலும் யோக்கியன்தான்! இல்லை என்றால் ஏன் அதைத் திரும்பக் கொடுக் வேண்டும். ஒரு நிமிஷம் முன் காலணாக்கூட இல்லை என்றேன். அடுத்த நிமிடம் என் பர்ஸ் கையில் கிடைத்தது. காலணாக் கூடத் தொடாமல் திருப்பிக் கொடுத்துவிட்டுப் போகிறார்!

'ஏழை வாத்தியார் என்றாலும் நேர்மை உள்ளவர்' என்று எண்ணினார் விச்சுவின் அப்பா.

விச்சுவின் எண்ணங்களுக்கு ஓர் எல்லையே இருக்கவில்லை. அலையாக்கடல் போல அவன் உள்ளக் கடலும் சிந்தனை அலைகளை வீசிற்று.

மறுநாள் வாஞ்சி சீக்கிரமே பள்ளிக்கூடத்திற்கு வந்தார். அவருக்கு முன்பே விச்சு காத்திருந்தான்.

''என்ன விச்சு, என்ன இவ்வளவு சீக்கிரம்?'' என்றார் வாஞ்சி, சிரித்துக்கொண்டே.

''ஸார், என்னை மன்னிக்க வேண்டும். நேற்று கோபுவின் பர்ஸை நான்தான் ஸார் எடுத்தேன். வேண்டுமென்று திருடவில்லை. இருந்தாலும் செய்தது தவறுதான். இதோ, அவன் பர்ஸ், ஸார்! இதைத் தயவு செய்து அவனிடம் கொடுத்து விடுங்கள்'' என்றான் விச்சு. அவன் கண்கள் கலங்கின.

''நேற்றுக் காலையில்தானே பிறர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது என்று படித்தாய். அதற்குள் அதை மறக்கலாமா?'' என்று கேட்டார் வாஞ்சி.

''காலையில் படித்த பாடத்தை விட, மாலையில் நீங்கள் செய்கையில் காட்டிய பாடந்தான், ஸார், என் மனத்தில் படிந்தது'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் விச்சு.

## யாருக்கு வைத்தியம்!






# திருடனும் நிலவு ஏணியும்

'சுகி'

இரவு நேரம்.

ஒரு வீட்டின் முகட்டு வழியாகத் திருடன் போய்க்கொண்டிருந்தான்; அந்த வீடோ பணக்காரனுடைய வீடு. முழங்கால் தேய முகட்டில் ஊர்ந்து செல்லுகிறவன், வீட்டுக்குள் நன்றாகப் பார்க்கலாம்.

இரவு நேரத்தில் பால்போல் காயும் நிலவில் பணக்காரர் வீட்டுக் கூரையில் திருடன் ஊர்ந்து போவது வியப்புத்தானே!

அழகு நிலவின் அற்புதமான கதிர்கள் ஒளி வீசின: கதிர்கள் பாய்ந்து ஜன்னல் வழியாக உள்ளே சென்றன: பெரிய அறை ஒன்றில் வீட்டுக்குச் சொந்தக்காரன் சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தான். கூரையின் மீது திருடன் நகரும் ஓசை பணக்காரன் செவியிலே விழுந்தது. நிசி வேளையில் முகட்டிலே நடந்து ஊர்ந்து சத்தம் செய்யக்கூடியவர்கள் திருடர்களாகத்தானே இருக்க வேண்டும்? இந்த எண்ணம் வந்தது வீட்டுச் சொந்தக்காரனுக்கு.

தன் மனைவியை எழுப்பினான். அவள் உரக்கக் கத்தும் பழக்கமுள்ளவள்: அதனால், ''அம்மணி, உன்னுடைய குரலை உயர்த்தாதே. முகட்டுக்கு மேலே திருடன் வந்துகொண்டிருக்கிறான். அவன் இன்னும் நம்மை நெருங்கி வரவில்லை. வந்ததும் நீ என்ன செய்யவேண்டும், தெரியுமா?'' என்று நிறுத்தினான்.

''கத்த வேண்டும்!''

''கத்தினால் ஆபத்து வரும்! நான் சொல்கிறபடி நீ செய்ய வேண்டும். செய்வேன் என்று சொல்லு.''

அவள், கணவன் சொன்னபடி செய்வதாக மெல்லிய குரலில் உறுதி கூறினாள்.

"அப்படிச் சொல், என் அன்பே! திருடன் நாம் படுத்திருக்கும் இந்தப் பகுதியை அடைந்ததும் நீ சொல்ல வேண்டுவது இதுவே. 'நாதா, நீங்கள் பலகாலமாக என்னிடம் சொல்லமாட்டேன் என்று சாதிக்கிறீர்களே, நீங்கள் எவ்வாறு பெரிய பணக்காரர் ஆனீர்கள்? அதைச் சொல்லுங்கள்!' என்று என்னிடம் கேட்கவேண்டும். புரிந்ததா?"

"சரி" என்ருள் அவள்.

இவர்கள் மெல்லிய குரலில் பேசிக்கொண்டிருப்பதை அறியாத திருடன் நிலவு வெளிச்சத்தில் முகட்டின்மீது நகர்ந்து நகர்ந்து வந்துவிட்டான்.

கணவன் சொன்ன விஷயத்தையே மனைவியும் திரும்பத் திரும்பக் கேட்டாள்.

இந்தக் குரல் திருடன் காதில் விழுந்தது. பணக்காரன், "உம், உம்" என்று சொன்னனே தவிர, அதற்குச் சரியான பதில் சொல்லவில்லை. மீண்டும் மீண்டும் கெஞ்சினுள் மனைவி. கூரையின் முகட்டிலே இருந்த திருடன் அணிலைப்போல முகட்டின்மீது ஒட்டிக்கொண்டு செவியைத் தீட்டினுன்.

"அருமை மனைவியே, எதற்காக என்னைக் கேட்கிருய்? உனக்குத் தெரிந்து என்ன பயன்? உனக்கு வேண்டியது உணவு, உடை, படுக்கை. உன் செலவிற்குப் பணம் கொண்டு வருகிறேன்."

"எனக்குத் தெரிந்தால் என்ன?"

"நீயும் பலகாலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிருய். நான் சொல்வதை யாராவது கேட்டால் என்ன ஆகும்? அவர்களும் என்னைப்போல் சம்பாதிக்க ஆரம்பித்துவிடுவார்கள். அந்த ரகசியத்தைக் கேளாதே!"

"நாதா, உங்களுக்கு என்மீது அன்பில்லை. இந்த நட்ட நடு நிசியில் யார் நமது பேச்சைக் கேட்கப் போகிருர்கள்?"

திருடனுக்குக் கொஞ்சம் மகிழ்ச்சி, கொஞ்சம் பயம். உடம்பை இன்னும் கூரையோடு ஒட்டி வைத்துக்கொண்டான்.

"தூங்கவிடாமல் தொண தொணத்துத் தொல்லை செய்கிருயே. சொல்லித் தொலைக்கிறேன். என்னிடம் உள்ள இந்த வீடு, பணப்பெட்டி, மாடு கன்று எல்லாம்.."

"எல்லாம் எப்படி வந்தது? சொல்லுங்கள்."

"திருடினேன்."

அவன் மனைவி கத்திவிட்டாள். "திருடினீர்களா? என்ஞல் நம்ப முடியாது. ஊரார் உங்களை யோக்கியன், நல்லவன் என்று எண்ணிக்கொண்டிருக்கிருர்கள். நானும் எண்ணிக்கொண்டிருக்கிறேன். தங்களைப் போன்ற யோக்கியமான மனிதர் இந்த ஊரில் இருக்க முடியாது. பொய் சொல்கிறீர்கள்" என்று ஆவேசமாகக் கத்தினுள்.

"உஷ், இரையாதே! உண்மை இதுதான். நிஜத்தைச் சொல்லித் தொலைக்கிறேன்."

"சொல்லுங்கள்."

"திருட்டிலே ஒரு ரகசியம் என்னிடம் சிக்கியிருக்கிறது" என்று இரண்டு விநாடி மௌனமாக இருந்தபோது அவன் மனைவியை விட முகட்டிலே இருந்த திருடனுக்குப் பொறுமையாக இருக்க முடியவில்லை.

"அந்த ரகசியம் என்ன? அதைச் சொல்லிவிடுங்கள் நாதா!"

"நான் பௌர்ணமி நிலவில் தான் திருடப்போவது வழக்கம். என்னேடு என்னுடைய சகாக்கள் பலர் வருவார்கள். எந்த வீட்டை வேட்டையாட விரும்புகிறேனே அந்த வீட்டின் முகட்டுக்குப் போவேன். போய் நிலவுக் கதிர்கள் எங்கே பாய்கின்றன என்று பார்ப்பேன். நிலவிலே வீட்டுச் சொந்தக்காரன் படுத்திருக்கும் அறை நன்ருகத் தெரியும்.."

"வீட்டுக்காரன் விழித்துக்கொண்டால் உங்கள் பாடு என்ன ஆகும்?"

"அதுதான் என்னிடமுள்ள ரகசியம். ஒழிஒழி, வழிவழி, ஒழி வழி—என்ற இந்த மந்திரத்தை ஏழு முறை சொல்லுவேன்."

பணக்காரன் மனைவி அந்த மந்திரத்தைச் சொல்லிப் பார்த்தாள். அவளுக்கு அத்தனையும் தவருக வந்தது.

''குறையும் கேள். 'ஒழிஒழி வழி வழி ஒழிவழி' என்று ஏழுமுறை சொன்னதும் நிலவுக்கதிர்கள் இருக்கின்றனவே அதைப் பிடித்துக்கொண்டு, ஏணிபோல வீட்டுக்குள் இறங்குவேன். அப்பொழுது அந்த வீட்டுக்குள் இருப்பவர்கள் அத்தனை பேரும் மெய்ம்மறந்துத் தூங்குவார்கள். எனக்கு வேண்டுமளவு பண்டம், பணம் முதலியவைகளை எடுத்துக்கொண்டு வருவேன். நான் செய்யும் சத்தங்கள் எவையும் அவர்கள் காதிலே விழாது. மீண்டும் நிலவுக்கதிர்களை ஏணிப்படியாகப் பிடித்துக்கொண்டு வீட்டின் கூரைக்கு வந்து, வந்த வழியே தெருவில் இறங்குவேன். இப்படித்தான் நம் வீட்டுக்குள்ளே இருக்கும் எல்லாப் பொருள்களும் வந்தன. நான் பணக்காரன் ஆனதும் இப்படியே!''


கணவன் சொன்ன விவரங்களை அறிந்த பெண் தூங்க ஆரம்பித்தாள். கணவனும் குறட்டைவிட்டான்.

இதுகாறும் கூரைமேல் இவ்வளவும் கேட்டுக்கொண்டிருந்த திருடனுக்கு அளவிட முடியாத மகிழ்ச்சி! தனக்குள்ளாகவே, ''இந்த வீட்டிலே, இதுகாறும் எங்கும் காணாத பெரிய பொக்கிஷத்தைக் கண்டு பிடித்தேன். இதைவிடப் பெரிய அதிர்ஷ்டம் என் ஆயுளில் கண்டதில்லை. கேட்டதும் இல்லை'' என்று முனகிக்கொண்டான்.

நிலவுக் கதிர்கள் பிரகாசமாக ஒளி விட்டன. ஜன்னல் அறை வழியாக அந்தக் கதிர்கள் பணக்காரன்மீது விழுந்து கொண்டிருந்தன.

பணக்காரன் விடும் குறட்டையொலியும் அதிகமாக வளர்ந்தது. திருடன் மீண்டும் நிலவுக் கதிர்களைப் பார்த்தான்.

'ஒழிஒழி வழிவழி ஒழிவழி' என்ற மந்திரத்தை ஏழு முறை சொன்னான். சொல்லச் சொல்ல உற்சாகமாக இருந்தது. இரு கரத்தையும் அகல விரித்து நிலவுக் கதிர்களை நெஞ்சோடு பிடித்த



ஒருவர்: என்ன சார், ஏதோ பெரிசா அமர்க்களப் படுத்துகிறீர்கள். நீங்கள் தான் ஆயிரக் கணக்கிலே சம்பாதிக்கிறீர்களே! உங்கள் பையன் இரண்டணாவை விழுங்கிவிட்டால் என்ன குறைந்துவிட்டது.

—குஞ்சு

படியே நிலவு ஏணியில் இறங்க ஆரம்பித்தான். ஆமாம், வீட்டுக்குள்தான்.

ஐயோ பாவம்! நிலவுக்கதிர்களைப் பிடித்து இறங்குவதாவது ஒன்றாவது! 'தொபுக்கடீர்' என்று முற்றத்துக்குள்ளே விழுந்தான். இதை எதிர்ப்பார்த்த பணக்காரன் பெரிய கம்பை எடுத்து வந்து ஓங்கிச் சாத்தினான். ''அடியப்பா அடி. உன்னுடைய வார்த்தைகளை நம்பிய என் முட்டாள்தனத்துக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும். உன் யோசனையைக் கடைப்பிடித்து முட்டாள் ஆகிவிட்டேன். பேராசையால் அடிபடுகிறேன்'' என்று கதறினான் திருடன்.

பொருள் கிடைக்காமல் உதையை வாங்கிக்கொண்டு திருடன் ஓடிவிட்டான். தந்திரசாலியான பணக்காரனும் திருடனிடமிருந்து பொருளைக் காப்பாற்றிச் சுகமாக வாழ்ந்தான்.

# ஆகாயக் கோட்டை

கிரிஜா

அன்று எங்கள் வீட்டு வாசலில் ஒரு மோட்டார் கார் வந்து நின்றது. சொந்தமாய்க் கார் வைத்துக் கொண்டிருக்கும் நண்பர்களோ, உறவினர்களோ எங்களுக்குக் கிடையாது. இதனால், வந்திருப்பவர்கள் யாராக இருக்கும் என்று என்னால் ஊகிக்க முடியவில்லை.

எங்கள் ஊர் ஒரு பட்டிக்காடு. எனவே மோட்டாரைச் சுற்றி ஒரு சின்னக் கூட்டமே கூடிவிட்டது. வண்டியில் வந்திருந்தவர்கள் யாராக இருக்கும் என்று பார்ப்பதற்காக நானும் என் தம்பி நாகராஜனும் விழுந்தடித்துக் கொண்டு வாசலுக்கு ஓடினோம்.

வண்டியோட்டியின் இருக்கையில் ஒருவர் அமர்ந்திருந்தார். வண்டிக்குள் வேறு ஒருவரும் இல்லை. அந்த மனிதர் வண்டியில் இருந்தபடியே தலையை மட்டும் வெளியே நீட்டி, ''சுப்பிரமணியம் இருக்கிறாரா?'' என வினவினார்.

என் தம்பி வேகமாகக் காரை நெருங்கி, ''இல்லை சார்! வெளியிலே போயிருக்கிறார். இன்னும் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வந்து விடுவார்'' என்று பதில் சொல்லிவிட்டு, ''நீங்கள் யார், சார்? என்ன வேலையாய் அப்பாவைத் தேடிக்கொண்டு வந்தீர்கள்?'' என்று கேட்டான்.

''என்னுடைய பெண்ணின் டியூஷன் விஷயமாய்ப் பார்க்க வந்தேன்!'' என்று கூறிய அந்த மனிதர், ''வண்டியிலே வேண்டுமானால் ஏறிக் கொள்ளேன், தம்பி!'' என்று கூறிக் கதவைத் திறந்து விட்டார். 'கஞ்சி வரதப்பா! எங்கே வரதப்பா?' என்று காத்துக்கொண்டிருந்த நாகராஜன் ஒரே பாய்ச்சலில் வண்டிக்குள் பாய்ந்து அவருக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்டான்.

''நீங்கள் எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள்?'' என்றான்.

''நான் பட்டிவீரன்பட்டியிலிருந்து வருகிறேன்'' என்றார் அவர்.

நாகராஜன் வண்டியிலிருந்து இறங்கி உள்ளே வந்து அளக்க ஆரம்பித்தான், என் அம்மாவிடம்.

''அம்மா, நம் அப்பாவிடம் தன் பெண்ணை டியூஷனுக்குப் பேசுவதற்காகத்தான் வந்திருக்கிறார். அந்தப் பெண் காரில்தான் டியூஷனுக்கு வருவாள்! தினமும் எனக்குக் கார் சவாரி கிடைக்கும். அப்படியே கார் ஓட்டவும் கற்றுக்கொள்ளலாம்!'' என்றான்.

''ஆமாமாம்! யாரையாவது யமலோகத்துக்கும் அனுப்பலாம்!'' என்றாள் அக்கா. முறைத்துப் பார்த்தான் நாகராஜன்.

பட்டிவீரன்பட்டி என்று அவள் சொன்னது அம்மாவின் காதில் உசிலம்பட்டி என்று விழுந்துவிட்டது. அம்மாவின் சொந்த ஊர் உசிலம்பட்டி. உடனே அம்மா தன் இளமை நினைவுகளை அளக்க ஆரம்பித்து விட்டாள், ''நான் உசிலம்பட்டியில் இருந்தபோது..'' என்ற பீடிகையோடு.

இந்த உசிலம்பட்டிப் பிரதாபத்தைக் கேட்டுக் கேட்டு, 'போர்' அடித்துப் போயிருந்த நாங்கள் எல்லாரும் ஏகோபித்த குரலில், ''உசிலம்பட்டி யில்லை அம்மா! பட்டிவீரன்பட்டி!'' என்று கத்தினோம்.

''ஓகோ! பட்டிவீரன்பட்டியா? அங்கேயெல்லாம் காபிக் கொட்டை ரொம்ப மலிவாய்க் கிடைக்குமே! அவரைப் பார்த்தால் பணக்காரர் மாதிரித்தான் இருக்



கிறது. காபிக்கொட்டை எல்லாம்கூட கறக்கலாம்!'' என்றாள் அம்மா. அவளுக்குக் காபிப் பைத்தியம்!

ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் அப்பா வெளியிலிருந்து திரும்பி வந்தார். காரிலிருந்த மனிதருடன் ஆங்கிலத்தில் என்னவோ பேசினார். கார் சிட்டாய்ப் பறந்தது. வந்த மனிதரை வழியனுப்பி விட்டு உள்ளே வந்த அப்பாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தன.

''ஏண்டா, முட்டாள்களா! வந்த மனிதரை அவர் எதற்காக வந்திருக்கிறார் என்றுகூட விசாரிக்காமல் இத்தனை நேரம் காக்கும்படியா செய்வார்கள்?'' என்று அப்பா எரிந்து விழுந்தார்.

''நான் விசாரித்தேனே, அப்பா! தன் பெண்ணின் டியூஷன் விஷயமாகப் பார்க்க வந்தாராம்!'' என்றான் நாகராஜன்.

''நன்றாய் விசாரித்தாய், போ! விசாரித்ததுதான் விசாரித்தாயே, என்ன டியூஷன் என்று விசாரிக்க வேண்டாமோ? அந்த மனிதர் பாட்டு டியூஷன் சொல்லிக் கொடுக்கும் சுப்பிரமணியத்தைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்!'' என்று உறுமினார் அப்பா.

எங்கள் அப்பா பல பள்ளிக்கூட மாணவ மாணவியருக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கிறவர். பாட்டுக்கும் அவருக்கும் உள்ள இடைவெளி அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் நடுவேயுள்ள இடைவெளியைக் காட்டிலும் அதிகமானது. எல்லோரும் வயிறு குலுங்கச் சிரித்துத் தீர்த்தோம்.

'காபிக் கொட்டை வீசைக் கணக்கில் மலிவான விலைக்குக் கிடைக்கலாம்' என்று எங்கள் அம்மா கட்டிய ஆகாயக் கோட்டையும், 'தினமும் கார் சவாரி செய்வதுடன் கார் ஓட்டவும் கற்றுக் கொள்ளலாம்' என்ற நாகராஜனின் மனக்கோட்டையும் துகள் துகளாக இடிந்து வீழ்ந்தன. இருவர் முகங்களிலும் அசடு வழிந்ததை இங்கே சொலலவா வேண்டும்?

# கண்கள்

## ஆர். விஜயா

### 1

“உலகில், சிற்றன்னைகளின் கொடுமை அதிகரித்துக் கொண்டே வருகிறது...

“இன்றைச் சிறுவர்களே, வருங் காலப் பாரதத்தின் திறமான பிர ஜைகள் என்று வாய் கிழியக் கத்துவதைக் கேட்டிருப்பீர்கள்! அந்த வருங்காலப் பிரஜைகளில் பெரும்பாலோர் சிற்றன்னைகளின் கொடுமையால் சிறுவர்களாகவே சீரழிந்துவிட்டால் வருங்கால பாரதம் என்னஆவது?....”

கைதட்டலும், ஆர்வாரமும் விண்ணையும் மண்ணையும் அதிரச் செய்தன! அந்தப் பேச்சாளர் மேலும் பேசிக்கொண்டே இருந் தார்.

மேலும் நின்று கேட்கப் பிடிக்கவில்லை கருணாகரனுக்கு. சிற்றன்னையின் கொடுமையால் சீரழிந்திருந்தது அவனுடைய உடல்! சிதைந்திருந்தது அவனு டைய உள்ளம்! இந்நிலையில் அந்தப் பேச்சாளரின் அனல் தெறிக்கும் வார்த்தைகள், அவனைச் சித்தம் கலங்க வைத்தது.

மெரீனா கடற்கரையை மென் நடையால் கடந்து, நடைபாதை மீதேறி-வீட்டைஅல்ல - சிற்றன்னை என்னும் சிங்கமுள்ள காட்டை நோக்கி நடந்தான் கருணாகரன்.

### 2

அந்த ஆண்டுதான், பள்ளி இறு தித் தேர்வுப் பரீட்சை எழுதிவிட்டு வீட்டில் இருந்தான் கருணாகரன், அவனால் விருப்பம் போல் வெளி யில் செல்ல இயலவில்லை.' அதற்கு அணையாக நின்றாள் அவனுடைய சிற்றன்னை!

அன்று ஞாயிற்றுக்கிழமை. கருணாகரன் கடைக்குச் சென்று வரும்போது, கண்ணில் பட்டது ஒரு சுவரொட்டி விளம்பரம். மனத்துக்குள்ளாகவே, அந்தச் சுவரொட்டியைப் படித்தான்.

“பிரபல பேச்சாளர் தேசபந்து, இன்று மாலை 5-30 மணிக்குமேல், 'சதிகாரச் சிற்றன்னைகள்!' என்னும் பொருள்பற்றிப் பேசு வார். தொடர்ந்து மற்றும் பலர் சொற்பொழி வாற்றுவார்கள். அனைவரும் வருக!”

சுவரொட்டியைப் படித்து முடித்ததும், கருணாகரன் புதுத் தெம்பைப் பெற்றான்! 'தேசபந்து' ஆற்றப் போகும் சொற்பொழி வைக் கேட்கவேண்டும் என்ற ஆவலால் அவனுடைய உள்ளம் துள்ளிற்று. 'தனக்கு ஒரு சித்தி இருக்கிறாள். கடற்கரைக்குச் செல்ல அவளுடைய அநுமதி தேவை!' என்னும் நினைவு, எங்கோ ஓடி ஒளிந்துகொண்டது!

வீட்டை அடைந்ததும் கருணா கரன் சுவரிலிருந்த கடிகாரத்தில் மணியைப் பாத்தான். நான்கு ஆக ஐந்து நிடங்கள் இருந்தன. அவசர அவசரமாகத் தலையைச் சீவிக் கொண்டான். பரபரவென்று சட்டையை மாற்றிக்கொண்டான். அடுத்த நொடி, வீட்டை விட்டுக் கடற்கரையை நோக்கி அவ னுடைய கால்கள் விரைந்தன!

விரைவில் திரும்பி விடலாம் என நினைத்துச் சென்றவன். பேச்சின் சுவையில், நேரம் போனதுகூடத் தெரியாமல் நின்று விட்டான் கருணாகரன்!

### 3

வீட்டை நெருங்க நெருங்க, அவனுடைய நடை தடைப்பட்டுக் கொண்டே வந்தது! பதினாறு வயதுக்குரிய நடையாக இல்லா மல், பதினாறு மாதக் குழந்தை யின் பழகும் நடைபோல் தோன் றிற்று!

கருணாகரன் வீட்டின் அருகில் வரும்போது, வாசலில் ரிக்ஷா




ஒன்று வந்து நிற்பதைக் கண்டான். அதிலிருந்து இறங்கியவர் அவனுடைய தந்தைதான் என்பதை, வாசலில் பிரகாசித்துக்கொண்டிருந்த மின் விளக்கொளியால் அறிந்தான். அவனுடைய உடல் அச்சத்தால் ஆட்டம் கண்டது!

கருணாகரன் வீட்டின் எதிரில் வந்து நின்றுகொண்டு, ஜன்னல் வழியாக, உள்ளே பார்த்தான். அவனுடைய அப்பா சட்டையைக் கழற்றியபடியே கேட்டார்: ''எங்கே கருணாகரன்?—''

''என்னைக் கேட்டால் எனக்கென்ன தெரியும்:....உங்கள் மகன் என்னிடம் ஏதாவது சொல்லிச் செல்கிறானா, என்ன?..'' என்று சலிப்புடன் கூறினாள் சித்தி.

''நான் இன்று கடற்கரையில் ஒரு கூட்டத்துக்குப் போயிருந்தேன்..'' என்று பேச்சை மாற்றினார் அப்பா. 'சதிகாரச் சிற்றன்னைகள்' என்பது விஷயம்!..'' என்று கூறிவிட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டார் அவர்.

சித்தியின் முகம் மாறிற்று. ''ஒருத்தி சித்தியாக மாற்றப்பட்ட பிறகுதானே சதிகாரியாகிறாள்! உங்களைப் போன்ற ஆண்கள் தானே அதற்குக் காரணம்?..'' என்று சுடச்சுட அப்பாவைப் பார்த்துக் கேட்டுவிட்டுத், திரும்பிக் கொண்டாள் அவள்.

கருணாகரனுக்கு அடியிலிருந்து, முடிவரை நடுக்கம் கண்டது.

''சரி; எனக்குச் சாப்பாடு போடு'' என்றார் அப்பா.

பத்து நிமிடங்கள் ஓடி விட்டன. அப்பா, சாப்பிட்டானதும் கூடத்துக்கு வந்தார். அதுவரை அந்த ஜன்னல் அருகிலேயே நின்றிருந்தான் கருணாகரன். அச்சத்தை ஒருவாறு கட்டுப்படுத்திக் கொண்டு, கதவைத் தட்டினான்.

''யார் அது?'' என்று வினவியபடியே கதவைத் திறந்தார் அப்பா. குரல் கேட்டுச் சித்தியும் அங்கே வந்தாள். ஆடு திருடிய கள்ளன் போல் நின்ற கருணாகரனைக் கண்டதும், ''இவ்வளவு நேரமாக எங்கேடா சுற்றிவிட்டு வருகிறாய்?'' என்று, கடுமையாகக் கேட்டார் பிள்ளையைப் பெற்றவர்.

''கடற்கரைக்கு...''

''ஓகோ..அப்படியா? அப்பாவும் பிள்ளையும் பேசிக் கொண்டுதான் அந்தக் கூட்டத்துக்குப் போனீர்களா?..உங்களிருவருக்கும் என்னைப் பிடிக்கவில்லை என்றால், ஒளிவின்றிச் சொல்லுங்கள்; நான் எங்காவது ஒழிந்து விடுகிறேன்..!'' என்று அழத் தொடங்கிவிட்டாள் சித்தி.

அப்பாவுக்குச் சங்கடமாகி விட்டது. ''தடிக் கழுதை! இந்த வயதிலேயே, உனக்கு என்னடா கூட்டம்?'' என்று

மகன்மீது பாய்ந்தார்-மான்மீது, சிங்கம் பாய்வது போல!

''இதுவரை வீட்டுக்கு வரவில்லை யென்றால் என்ன நினைப்பது? காரிலோ, கீரி லோ மாட்டிக் கொண்டு, செத்துத் தொலைந்திருந் தால் என் தலையிலல்லவோ விடிந் திருக்கும்? எண்ணாத பழிக்கெல் லாம் என்னை ஆளாக்கப் பார்க் கிறான். படுபாவி!..'' என்று அப்பாவின் கோபத்துக்குத் தூபம் போட்டாள் சித்தி.

சித்தியின் சொல், அவர் சிந் தையை உந்திற்று. உள்ளத்தில் கல்லடி பட்டதுபோலிருந்தது! தம் ஆத்திரத்தை எல்லாம் ஒன்று திரட்டி, வலுக்கொண்ட மட்டில், மகனைத் தாக்கினார். ''ஒழிந்து போ; கழுதை! திரும்பாதே!..'' என்று வெளியே தள்ளி, கதவை மூடிக்கொண்டார்!

## 4

காலத்தின் மீளாத நீள் வழி யில், நான்கு ஆண்டுகள் கடந்து சென்றன.

கருணாகரனின் பிரிவைச் சிறிதும் மதியாது, மகிழ்வாகவே வாழ்ந்து வந்தாள் சித்தி. அப்பா வின் உள்ளத்தின் அடித்தளத்திலே துக்கம் துளைத்தாலும் சித்தியின் மலர்ந்த முகம் ஒருவித ஆறுதல் அளித்திருக்கும்!

ஒரு நாள் அப்பாவுக்குத் தோட் டத்திலிருந்த, ஒருவிதக் கள்ளியின் பால் பட்டுவிட்டது. இரு கண்களும் பார்வை மங்கத் தொடங்கிற்று. நாளுக்கு நாள் அதிகமாகி, கண்கள் பார்வையை இழந்தன.

எனவே ஒரு நாள், யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல், சித்தி பிறந்தகம் சென்றுவிட்டாள்! ஒளி யற்ற கண்களையுடைய அப்பா, உள்ளம் நைந்துருகினார்! கருணா கரனை நினைத்துக் கதறினார்!

கருணாகரன், வேறெங்கும் ஓடி விடவில்லை; சென்னையிலேயே மூட்டை சுமப்பது போன்ற தொழில்களைச் செய்து வந்தான்!

வீட்டில் நடைபெறும் ஒவ் வொரு விஷயமும் அவனுக்கு எப் படியோ, தெரிந்துகொண்டுதானி ருந்தது. அப்படி இருக்க, கண்களை இழந்ததை மட்டும் எப்படி அவன் அறியாமலிருப்பான்? சித்தி, தந்தையைத் தவிக்கவிட்டு ஓடி விட்டதை எப்படி அவன் தெரிந்து கொள்ளாதிருப்பான்?

* * *

கைதட்டும் சத்தம் கேட்டு, கருணாகரன் திரும்பிப் பார்த்தான். யாரோ ஒரு பிரமுகர் அவனைத் தான் அழைத்தார். கருகணாகரன் அவருடைய அருகில் சென்றான். அவர் கணநேரம் தன்னை மறந்த வராய், கருணாகரனையே உற்றுப் பார்த்தார்! பார்வை நேரம் நீடித் தது. அவர் குறிப்பாக, அவ னுடைய முகத்தை—அந்த முகத் தில் ஒளி காட்டும் இரு கண்களையே உற்றுப் பார்த்தார்!

கருணாகரனுக்கு அவர் பார்வை, என்னவோ போலிருந்தது! எனவே, ''ஏன் ஐயா, கூப்பிட்டீர் கள்?..'' என்று வினவினான். ''ஒன்றுமில்லை இதை..'' அவர் தயங்கித் தயங்கிக் கூறிமுடிக்கும் முன்னரே, ''சுமந்து வரவேண் டுமா!..சரி, ஐயா!'' என்று கூறிக் கொண்டே அந்த மருத்துவத் தோல், பெட்டியை சுமந்து கொண்டு நடந்தான் கருணாகரன்.

''ஏன் தம்பி, உனக்குக் கல்யா ணம் ஆகிவிட்டதா?''

கருணாகரனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'இவர் ஏன் நம்மைப் பார்த்து இப்படிக் கேட்கிறார்?' என்ற வினா அவனுடைய உள்ளத் துள் எழுந்தது. ''இல்லீங்க..'' என்றான்.

''அப்பா, அம்மா..?'' அவ ருடைய முகத்தை, நின்று நோக்கி னான் கருணாகரன். ''இல்லீங்க..'' என்று இழுத்தான்.

அப்போது, ஒரு கார் கருணா கரனை உராய்ந்தபடி ஓடிற்று. ''ஏன் தம்பி, பார்த்து நடக்கக் கூடாதா!..'' என்றவர், ''உயிர் மேல் உனக்கு ஆசை இல்லையோ?'' என்று கேட்டார். அவருடைய வினாக்கள் கருணாகரனுக்கு விசித் திரமாகப் பட்டன. ''இல்லீங்க!'' என்றான் 'பட்'டென்று. ''என்ன!'' விந்தையால் உந்தப் பட்ட அந்த மனிதர் கேட்டார்.

"உனக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டதோ! காரணம்?"

"காரணம் வறுமைதான்! ஆதியில் சித்தியின் கொடுமையும்.."

"வறுமை நீங்கி, கையிலே பணம் குவிந்தால் சித்தியின் கொடுமை தானாக மறைந்துவிடாதா?"

'பணம எப்படிக் குவியும்?' என்று எண்ணியவாறே, "ஆமாங்க" என்று சொல்லி வைத்தான்.

"அப்படியானால்......"

மீண்டும் தயக்கம்.

"ஏன் தயங்குகிறீர்கள்? உயிர் இருந்தால்தான் பணம் வந்தாலும் அதை அநுபவிக்க முடியும். ஆகையால் நீர் உயிரைக் கேட்கப் போவதில்லை. அதுவரையில் நிச்சயம். ஆனால் நான்தான் அதற்கும் தயாராக இருக்கிறேனே: அப்படியிருக்க மீண்டும் ஏன் தயங்குகிறீர்கள்?"

"அப்படியானால் உன்னுடைய கண்களில் ஒன்று எனக்குத் தேவைப்படுகிறது. தந்துவிடுகிறாயா?.."

கருணாகரனுக்குப் 'பகீர்' என்றது! கண்களை இழப்பதைவிட உயிரையே இழந்துவிடலாமல்லவா? அவன் குழப்பத்தில் மௌனமாக இருந்தான். அவர் மேலும் கூறினார்! "இந்தக் கண்களுக்கு உலகே மதிப்பு ஆகாது எனினும், ஆயிரம் ரூபாய் வாங்கிக்



கொள்! நீ விரும்பினுல் ஆயுள் முழுதும் அந்த இடத்திலேயே எந்தவிதக் கவலேயுமின்றி வாழலாம். உணவிலிருந்து ஏனைய சுகம் முழுதும் உன்னைத் தேடிவரும்..''

கருணுகரனின் மனத்தில் மகிழ்வு சுழித்தோடிற்று! அவன் சட்'டென்று, ''நீங்கள் கூறியவற்றிற்கெல்லாம். ஒப்புக் கொள்கிறேன், ஐயா. ஆனுல் ஒரு நிபந்தனை..''

''தாராளமாகச் சொல்லு.''

''இந்த விலாசத்தில், எனக்குத் தெரிந்தவர் ஒருவர் இருக்கிறுர். அவருக்குக் கண் தெரியாது. அவருக்கு ஒளி கிடைக்குமா என்று, மருத்துவரிடம் காட்டிக் கேட்டு, ஒளி பெறச் செய்து, எனக்கு அளிப்பதாகக் கூறினீர்களே, ஆயிரம் ரூபாய், அதை அவருக்கு அளிப்பதுடன், நான் தரும் கடிதத்தையும் அவரிடம் தந்துவிடுங்கள்; அவ்வளவுதான்! அவர் கேட்டால் நீங்களாகவே உதவி செய்வதாகக் கூற வேண்டும். அப்படிச் செய்வதாயின், தங்களுடன் வரத் தயாராக உள்ளேன் நான்.''

''நானும் ஒரு கண் டாக்டர் தான். எனக்கு இவ்வூர் கண் ஆஸ்பத்திரியில் நண்பர்கள் உண்டு; நீ கூறியது போலவே செய்கிறேன். மிக்க நன்றி'' என்றுர் அவர்.

## 5

''உங்களுக்குச்சிகிச்சைஅளிக்கப் பெருமுயற்சி எடுத்துக்கொண்ட எனது மருத்துவத்துறை நண்பர், இதை உங்களிடம் தரச் சொன்னுர்'' என்று கூறியபடியே ஒரு கவரைத் தந்தார் ஒரு டாக்டர்.

கவரைப் பெற்றுக் கொண்டு, டாக்டரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார் கருணுகரனின் தந்தை. ஆம்; சில நாட்களுக்கு முன் இழந்த பார்வை, மீண்டும் கிடைத்துவிட்டது! அவருக்கு! அதன் பலன்—

பழக்கமான சென்னைப்பட்டினம், அவருடைய கண்களுக்குப் புதிதாகத் தோன்றிற்று!

வீட்டிற்கு வந்ததும், கவரைப் பிரித்தார் அவர். அதில் இருந்த, பத்து நூறு ரூபாய் நோட்டுக்கள் அவரைத் திகைப்பிலாழ்த்தின!

அதிலிருந்த அந்தக் கடிதத்தைப் பரபரப்புடன் படித்தார்.

''அன்புள்ள அப்பாவுக்கு,

கருணுகரன் வணக்குடன் எழுதியது. நலம். நலமறிய அவா! வீட்டை விட்டுச் சென்ற நாளாக, நான் சென்னையிலேயேதான் வசித்து வந்தேன்.

''தங்களுக்குக் கண் பார்வை போய்விட்டதிலிருந்து, எனக்கு வாழ்வே வெறுத்துவிட்டது! இந்த நிலையில்தான், தஞ்சாவூரிலிருந்து வந்த மருத்துவர் ஒருவரின் கண்கள் என் கண்களைக் கண்டன!

''அவ்வூர்க் கோடீசுவரரான ஒருவரின் மகனுக்குப் பார்வை போய்விட்டதாம்; அவ்வாலிபனுக்குத் தகுந்த கண்ணைத் தேடித்தான் இந்த மருத்துவர் சென்னைக்கு வந்தாராம்.

அவர் கண்களில் நான் பட்டுவிட்டேன்!...

''அந்த மருத்துவர் வந்த செய்தியைக் கூறினுர். நீங்கள் கண்களைப் பெற்று, மீண்டும் சித்தியுடன் வாழ்வு நடத்த வேண்டும் என்ற ஒரே காரணத்தினுல், நான் உடனே ஒப்புக்கொண்டேன்!..

''என்னைப்பற்றி நீங்கள் கவலைப் படவேண்டாம். என் உயிர் உள்ள மட்டும், அந்தச் செல்வந்தர் எனக்கு, உணவிலிருந்து மற்றச் சுகங்களை எல்லாம் செய்து கொடுப்பதாக உறுதி அளித்திருக்கிறுர்.

''இந்த ஆயிரம் ரூபாயை வைத்துக் கொண்டு, தாங்கள் பிழைக்க ஏதேனும் வழி தேடிக் கொள்ளுங்கள். சித்தியையும் அழைத்து வந்து வாழ்க்கை நடத்துங்கள்!..சித்தியிடம் நான் மன்னிப்புக் கேட்டதாகக் கூறுங்கள்!...வணக்கம்.

கருணுகரன்''

கருணுகரனின் தந்தை முன் உலகமே சுழன்றது. அதன் நடுவில் நின்று அவர் சுழன்றுர்!

''இறைவா! கருணுகரன் மீது உன் அருள் பெருகட்டும்''-கண்ணிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர் உதிர்ந்தன.




# அண்ணன் கடிதங்கள்

சம்பந்தம்

அன்புள்ள தம்பிக்கு; ஆசிகள் பல

நான் ஊரிலிருந்து வெகு தூரத்துக்கப்பால் மாற்றலாகி வந்துவிட்டேன், இருந்தாலும் இதோ, இதுபோல் நான் அடிக்கடி எழுதப்போகும் கடிதங்களின் மூலம் உன் அருகிலேயே இருந்துகொண் டிருப்பேன். நீயும் அடிக்கடி உன் கைப்பட எழுதி வந்தால் என்னருகிலேயே இருப்பது போல் உணரலாம்.

கடிதங்களே எதிரே வந்து வாய் திறந்து உரையாடத் தொடங்கினால், பிறகு தொலை தூரமெல்லாம் ஏது? அருகில் இருப்பதுபோலத்தான் ஆகும். ஆனால் நீ என் கடிதத்தைக் கவனமாகப் படிக்க வேண்டும்! நீ அப்படிப் படிக்காவிட்டால் என் ஆசை யெல்லாம் வீணாக அல்லவா போய்விடும்! இல்லை; இல்லை. எனக்குத் தெரியும், நீ ஊக்கமாகப் படிப்பாய் என்று. நான் முன்பே சொல்லியிருக்கிறேன்! படிக்கும்பொழுது விளையாட்டைப் பற்றியோ, அல்லது விளையாடும்பொழுது படிப்பைப்பற்றியோ நினைக்கக்கூடாது. அதுபோல் நீ படிக்கும்பொழுதும் எழுதும்பொழுதும் வேறு காரியத்தில் ஈடுபடாதே. அப்பொழுதுதான் படிப்பது மனத்தில் பதியும்.

இப்படித்தான் ஒரு நாள் ஸர் ஐஸெக் நியூடன் தாம் கண்டுபிடித்த பூமியின் ஈர்ப்புச் சக்தியைப் பற்றி மிகவும் ஆழ்ந்து யோசித்துக் கொண்டு அமர்ந்திருந்தார். அவருக்காக வந்த சாப்பாடுகூட அவருக்கெதிரில் மேஜையின்மேல் அப்படியே மூடிக் கிடந்தது. சற்று நேரத்தில் அவரைப் பார்க்க வந்த நண்பர் ஒருவர், எதிர்த்த நாற்காலியில் வந்தமர்ந்தார். வெகு நேரமாயிற்று. இன்னும் நியூடனின் யோசனை முடிந்தபாடில்லை. காத்திருந்தவருக்கோ நல்ல பசியெடுக்கத் தொடங்கிவிட்டது. உடனே அங்கிருந்த சாப்பாட்டை எடுத்துச் சாப்பிட்டுவிட்டு அப்படியே மூடி வைத்துவிட்டார். அவர் சற்று நேரம் சென்று ஒருவாறு தம் யோசனையை முடித்துக் கொண்டு, சாப்பாட்டைத் திறந்தார். நியூடன் அங்கே காலியாயிருந்ததைக்கண்டுவிட்டு, "அடடா! முன்பே சாப்பிட்டு விட்டேன் போலிருக்கே!" என்று சொல்லிக் கொண்டே, வந்த நண்பரை விசாரிக்கத் தொடங்கினாராம்.

எந்தக் காரியத்திலும் சரி, நீ கவனமாயில்லை யென்றால், பிறகு உன் நேரம் இரு மடங்கல்லவா வீண் செலவாகும்! நினைவில் வைத்துக்கொள். முதலாவதாக, நீ அதே காரியத்தை மறுமுறை செய்தாக வேண்டும். இரண்டாவதாக அதை முன்பைவிட அதிக முயற்சியோடும் செய்யவேண்டி வரும்.

அதனால் குறிப்பிட்ட நேரத்தில் ஒன்றே செய்யவேண்டும். அதை நன்றாகவும் செய்யவேண்டும். சாப்பிடும் நேரத்தில் விளையாடுவதும், விளையாடும் நேரத்தில் படிப்பதும் ஒழுங்காகுமா? அந்தந்த வேளையில் அதாவது அதற்கெனக் குறிப்பிட்ட நேரத்தில் அந்தந்தக் காரியத்தைச்

செய்வதுதான் நன்ருயிருக்கும். அது தான் ஒழுங்கு. அப்படிச் செய்வதை யும் கவனமாக அதே நினைவாகச் செய்யவேண்டும். தெரிகிறதா?

அன்றொரு நாள் இரவு படுக்கப் போகுமுன், ''வாசல் கதவைத் தாளிட்டாயா?'' என்று கேட் டேனே, நினைவிருக்கிறதா? அதற்கு நீ என்ன சொன்னுய்? 'தாளிட்ட தாகத்தான் நினைக்கிறேன். எதற் கும் இதோ பார்த்து வந்து விடுகிறேன்' என்று எழுந்து சென்ருய்! அது சரியல்ல?

பிறகு சென்று பார்த்துவிட்டுத் தாளிட்டிருப்பதாகவே திரும்பி வந்தாய். நான் கேட்டதுமே பளிச்சென, ''ஆகா! அப்பொழுதே தாளிட்டுவிட்டேன்!'' என்று ஏன் உன்னுல் சொல்ல முடியவில்லை! நீ அப்படித் தாளிடும்பொழுது அதே நினைவாகச் செய்திருந்தால் தாளிட் டோமோ இல்லையோ என்ற சந் தேகம் ஏற்பட்டிருக்குமா? நீ அப் படித் தாளிடும்பொழுது உன் நினைவெல்லாம் அவசியம் வேறு எங்கேயோதான் இருந்திருக்க வேண்டும்!

அதனுல் மறுமுறையும் சொல் கிறேன். குறிப்பிட்ட வேளையில் ஒன்றே செய். அதை நன்ருகச் செய். பிறகு செய்து கொண்டால் போகிறது என்று எப்பொழுதும் எதையும் ஒத்திப்போடவும் போடாதே! அதன் பிறகு, 'அடடா! அப்பொழுதே செய்யா மற் போனேமே' என்று நீயே வருந்தவேண்டி வந்தாலும் வரும். பிறகு நீ என்ன செய்வாய்? உன்னுல் என்னதான் செய்ய ஆகும்? சென்று போன நேரம் திரும்பி வருமா?

மகாத்மா காந்தி தமக்கு வரும் கடிதங்களுக்கு அன்றைக்கே பதில் எழுதிவிடுவார். நாளைக்கு ஆகட் டுமே என்று எப்பொழுதும் ஒத்திப் போடுவதே கிடையாது. இரவு எந்நேரமானுலும் சரி, பதிலெழுதி முடித்துவிட்டுத்தான் படுக்கப் போவார். அதுபோல் உன் வாழ்க் கையிலும் ஒருவித நிர்ணயம் வேண்டும்! எப்பொழுதும் ஒன்றையே நன்ருகச் செய்து முடிப் பதோடு அதை, 'அன்றே அப் பொழுதே' செய்து முடித்துவிடு.

இந்த ஏற்பாடு உன் மாணவ வாழ்க்கைக்கு ரொம்பவும் அத் தியாவசியம். நீ இதைத் தவருமல் அவசியம் கடைப்பிடிக்கவேண்டும்.

அன்புள்ள,
அண்ணன்.

## பந்து வந்ததோ?



## 14. அந்தப் பெண் எங்கே?

இன்ஸ்பெக்டர் பட்டாபியின் தனி அறையில் அன்று மாலை எல்லோரும் கூடியிருந்தார்கள். ஸி. ஐ. டி. சாமிக்கண்ணு, ஸம்பத், ஸ்ரீதரன், இவர்களைத் தவிர இரண்டு போலீஸ் கான்ஸ்டபிள்களும் இருந்தனர். பட்டாபி எடுத்தவுடனேயே சாமிக்கண்ணுவிடம், ''என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

சாமிக்கண்ணு பிரமாதமாகத் தன் திட்டங்களை விவரித்தார். கடைசியாக ஸம்பத்தின் அபிப்ராயத்தைக் கேட்டார் பட்டாபி.

''ஆமாம் அப்பா! இன்று நம்முடைய திட்டங்களெல்லாம் அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. நாம் காலையில் பேசிக்கொண்டிருந்தோமே, அந்த அறையின் ஜன்னலுக்கு வெளியே ஓர் ஆள் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்தான். என் பார்வை அவன் மீது விழத் தொடங்கியதும் உடனே தலை மறைந்துவிட்டான்.''

''அட!..'' என்றார் பட்டாபி ஆச்சரியத்துடன்.

''அநேகமாக நீங்கள் வேண்டுமானால் பாருங்கள். நாளைக்கே அந்த வீட்டிலிருந்து குடி மாறிவிடுவார்கள். அப்புறம் தேடவேண்டியதுதான் அவர்களை..'' என்றான் ஸம்பத்.

அன்று இரவே ஒன்பது மணி சுமாருக்கு ஹெட்கான்ஸ்டபிளும் பட்டாபியும் திருவல்லிக்கேணி சென்று அந்த வீட்டில் விசாரித்தார்கள். கதவு பூட்டியிருந்தது. வாசலில் காவல்காரன் இருந்தான்.

''ஏம்பா! வீட்டிலே யாரு இருக்காங்க? .'' என்று கேட்டார் சாமிக்கண்ணு.

''வீட்டிலே ஒருத்தரும் இல்லீங்க..வீடு காலி .''

''வீடு காலியா?..எத்தனை நாளா?..''

''இரண்டு நாளாச்சுங்க..''

''ஓகோ..சரி! இப்ப காலி.. வாடகைக்கு விடுவாங்களா?''

''ஆமாமுங்க வாடகைக்கு..''


''என்ன! வாடகை?..''

''வாடகை நூறு ரூபாய்..''

''என்ன! நூறு ரூபாயா?.. அடேயப்பா!'' என்றார் அவர். பட்டாபி புன்னகை புரிந்தார்.

* * *

விநாயகத்தின் வீட்டில் செல்லாயி பகல் முழுவதும் வாசற் கதவைச் சாத்தியே வைத்திருந்தாள். அவளுக்கு அந்த இரும்புப்பெட்டி வந்ததிலிருந்து, கவலை சூழ்ந்துவிட்டது. மாலை ஆறரை மணி சுமாருக்கு கைவிளக்கை ஏற்றி அடுப்பைப் பற்ற வைத்தாள். அவள் புருஷன் இன்னும் வராதது, அவளுக்கு இன்னும் பயத்தை அதிகமாகக் கொடுத்தது. நல்ல வேளை! பகலில் யாரும் வந்து அவளைத் தொந்




பரிசுபெற்ற தொடர்கதை!




தரவு செய்யவில்லை. முதலில் அந்த இரும்புப் பெட்டியை வேறு இடத்தில் கொண்டுபோய் வைத்தாக வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள். திடீரென்று முற்றத்தில் 'தொம்'மென்று சத்தம் கேட்டது. ஒரு நிமிஷம் அவள் மூச்சு நின்று விட்டது. ஏனெனில் வந்து குதித்தது ஓர் ஆள்! காலையில் வந்தவனாகத்தான் இருக்கவேண்டும். உடல் முழுவதும் அவளுக்கு ஒருமுறை நடுங்கிவிட்டது. நாக்குழற, ''ஐயோ!.. திருடன்..திருடன்..'' என்று குரல் கொடுத்தாள். மறு நிமிஷம் அந்த ஆள் பாய்ந்து வந்தான். அவன் கையில் துப்பாக்கி விறைப்பாக இருந்தது. 'கத்தினால், சுட்டுவிடுவேன் சுட்டு!'' என்று மிரட்டினான் அவன்.

''எங்கே வைத்திருக்கிறாய் பெட்டியை?'' என்று கேட்டான்.

''பெட்டியா? ஏது பெட்டி?''

''உண்மையைச் சொல்லிவிடு.. குறி தவறாது..''

''இங்கே ஒன்றுமில்லே போ!''—செல்லாயி மெதுவாக நகர்ந்து நகர்ந்து ஒரு சுற்று வந்து 'வெடுக்'கென்று கதவுத் தாழ்ப்

பாளைத் திறந்துவிட்டாள். அவள் ஓட யத்தனித்த சமயம், ''வெளியே ஓடினால் சுட்டுவிடுவேன்..போகாதே...சொல்... எங்கே வைத்திருக்கிறாய்?..'' என்றான்.

''சொல்ல முடியாது..அது இங்கே இல்லை..''

''இரக்கம் காட்டமாட்டேன்.. சொல்லு....இங்கே பெட்டி வந்ததா இல்லையா?..''

''வந்தது உண்மை..ஆனால் அது போயிடுச்சு..''

''எங்கே போகும்? ஊம்..''

'படீ' ரென்று கதவு திறந்தது. விநாயகம் பாய்ந்து வந்தான். துரை துப்பாக்கியுடன் பேய்ச் சிரிப்புச் சிரித்தான். விநாயகம் தன்னுடைய துப்பாக்கியை உருவிவிட்டான்.

''டேய்! விநாயகம்! விடமாட்டேன். துப்பாக்கியில் இரண்டு ரவைகள் போட்டிருக்கிறேன்.



ஒன்று உனக்கு. மற்றது உன் சம்சாரத்திற்கு...ஹஹ்ஹ..ஹஹ்.. ஹ்..ஹ்..ஹஹா..''

''என்னடா சிரிக்கிறே.. எங்கேடா வந்தே?..நான் போலீஸ். ஜாக்கிரதை!''

''போலீஸ்..சரிதான். பெட்டியை எடு முதலில். இல்லாட்டி குண்டு சீறும்..''

''பெட்டி இங்கே இல்லை..''

''எங்கேயாம் அது? மறைக்காதே.. நீ பெட்டியைக் கொண்டு

வந்தது எனக்குத் தெரியும்..''

''தெரிந்தால் பத்திரமா வச்சுக்க..''

''கேலியா செய்யறே? உயிர் பறக்கப் போகுது இப்போ..''

''யாருடைய உசிரு தம்பி?''

''பெட்டி எங்கேடா?''

''பெட்டி போய்விட்டது போலீஸ் ஸ்டேஷனுக்கு. இத்தனை நேரம் உன் வீட்டுக்குப் போலீஸ் 'வான்' போயிருக்கும்..''—குருட்டாம் போக்கில் விநாயகம் ஒரு போடு போட்டான்.

துரை திகைத்துத் திணறினான்.

''ஓகோ!....துரோகி!...உன்னை விடமாட்டேன். இன்னிக்கிப் பலி வாங்கிட்டுத்தான் விடுவேன்..''

''பார்! நானும் விடமாட்டேன், இரண்டில் ஒண்ணு....வா..''

செல்லாயி அதற்குள் உஷாராகி விட்டாள். சிறிது சிறிதாக நகர்ந்து துரைக்குப் பின்னால் வந்து விட்டாள். துரை கவனிக்கவில்லை. அவள் கையிலகப்பட்டது மண் வெட்டி செய்வதற்காக எடுத்து வைத்திருந்த ஒரு கழிதான்: கழி 'சடாரெ'ன்று மேலே உயர்ந்தது. அது மேலே—துரையின் தலைக்கு மேலே—ஒரு தடவை சுழன்றது. பன் மடங்கு வேகத்தில் அது இறங்கி, துரையைத் தாக்கியது. துரை சிறிது நகர்ந்துவிட்டான். தலையில் விழ வேண்டிய அந்த அடி தோள் பட்டையைப் பலமாகத் தாக்கியது. துரை 'தடா'லென்று சாய்ந்தான் அடி தாங்காமல். செல்லாயி பெருமூச்சு விட்டாள். கீழே விழுந்த துரைக்குப் பேச்சு மூச்சு ஒன்றும் இல்லை. விழுந்தவன், விழுந்தவன்தான். முனகல் கூட இல்லை. அவன் எழுந்திருக்கவே இல்லை. விநாயகம் கீழே குனிந்து அவன் முகத்தைப் பார்த்து, ''ஐயோ! செல்லாயி! கொன்னுட்டியே!'' என்று அலறினான்.

* * *

எதிராஜ் பகல் மூன்று மணியிலிருந்து யோசனை செய்து செய்து, துரை வெளியே போனதும் ஒரு முடிவுக்கு வந்தான். உடனேயே மாடியில் ஜன்னல் கதவுகளையெல்லாம் சாத்தினான். அந்தப் பெண்ணை அழைத்து அவளை அங்கே இங்கே நகரக்கூடாது என்று எச்சரித்தான். பிறகு வேலைக்காரனைக் கூப்பிட்டு அவளுக்கு வேளா வேளைக்கு ஆகாரம் கொடுக்கும்படி கட்டளையிட்டான். முக்கியமான சில பொருள்களை மட்டும் எடுத்துக் கொண்டான். பிறகு மாடிக் கதவைச் சாத்திப் பூட்டினான். பிறகு வெளிக்கதவையும் பூட்டிவிட்டு வெளியே வந்து, வேலைக்காரனிடம், யார் வந்து விசாரித்தாலும் 'அந்த வீடு காலி' என்று சொல்லும்படி எச்சரித்தான். அப்படி யாரேனும் வாடகையைப் பற்றிக் கேட்டால் நூறு ரூபாய் என்று சொல்லச் சொன்னான். அப்பொழுதுதானே யாரும் குடி வர மாட்டார்கள்!

எதிராஜுக்கு, துரை சொன்ன செய்திகளிலிருந்து பயம் அதிகமாகி வந்தது. 'பயமே கிடையாது' என்று சொல்லிக் கொண்டிருந்தவன் அதிகமாகப் பயப்பட ஆரம்பித்து விட்டான். உடனேயே கிளம்பி விட்டான். வேலைக்காரனிடம் மட்டும், ''துரை வந்தால் மட்டும் 'கோடவுனு'க்கு வரச்சொன்னேன் என்று சொல்லு'' என்று சொன்னான். பிறகு கிளம்பிப் போய் விட்டான்.

அவன் வெளியே போனதை அடுத்த வீட்டின் ஜன்னல் வழியே பஞ்சு ஸார் கவனித்துக்கொண்டிருந்தார். 'கறுப்புக் கண்ணாடி' ஆள் அதை கவனித்ததாகத் தெரியவில்லை. பஞ்சு ஸாருக்கு முதலில் அவன் அவ்வாறு செய்ய வேண்டியதன் காரணம் புரியவில்லை. அதில் ஏதோ விஷயம் இருக்கிறதென்று மட்டும் தெரிந்து கொண்டார் அந்தக் கிழவர்.

அவர் உடனே அதைச் சாமிக் கண்ணுவுக்குத் தெரியப்படுத்த விரும்பவில்லை. ஏனெனில் அவர்கள்தான் இரவு வரப் போகிறார்களே என்று அலட்சியமாக விட்டு விட்டார். இரவு ஒன்பது மணி வரை ஒருவரும் வராதது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

(தொடரும்)

# சிவப்பு மாளிகை

சோலைவன மாளி சாரங்கப்பா

## 1. கடற்கரையில்

மாலை மணி ஐந்தரை இருக்கும். கடற்கரையில் ஒரே கூட்டம். தண்ணீருக்கு அருகில் ஐந்தாறு சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருவன், ''ஏண்டா ஸ்ரீதர், டிரஸ்ஸெல்லாம் பிரமாதமாயிருக்கே! உங்க வீட்டிலே ஏதாவது விசேஷமா?'' என்று கேட்டான்.

''இல்லேடா மணி, இன்னிக்கி எனக்குப் பதிமூன்றாவது பிறந்த நாள்'' என்றான் ஸ்ரீதர்.

சிறிது நேரங்கழித்து ரகுராம், ''நீங்க எல்லோரும் கிறிஸ்துமஸ் லீவிலே எங்கேயாவது ஊருக்குப் போவீர்களா?'' என்று கேட்டான்.

ரஞ்சன் டில்லி போகப் போவதாகவும் மணி திருச்சி செல்வதாகவும் கூறினார்கள். ஸ்ரீதர் மறுநாள் காலை சோலைவனம் போவதாகக் கூறினான்.

சேது உடனே, ''அங்கே யாருடா இருக்கா?'' என்று கேட்டான்.

''அங்கேதான் எங்க தாத்தா, பாட்டி இருக்கா. அதுதான் எங்க சொந்த ஊர். டேய், நாம் எல்லோரும் ஊருக்குப் போகி



ளும். இனி கிட்டத்தட்ட ஒரு மாதம் கழித்துத்தான் மறுபடியும் சந்திப்போம். அதனாலே இன்னிக்கி எட்டு மணிவரை இருந்து விளையாடிட்டுப் போகலாம்'' என்று ரஞ்சன் கூறியதை ஆமோதித்து விளையாட்டைத் தொடர்ந்தனர்.

இவர்கள் போட்ட கூச்சலில் கடற்கரையே அதிர்த்தது. புரண்டு வரும் அலைகளுடன் போட்டியிட்டுக்கொண்டு முன்னும் பின்னும் துள்ளிக் குதித்தனர். அன்று அவர்கள் விளையாடியதைப் போல் என்றுமே விளையாடியதில்லை.

## 2. ரெயில் பிரயாணம்

ஸ்ரீதர், காப்டன் கோபாலனின் ஒரே பையன். அவனுக்கு வயது பதிமூன்று முடிந்து விட்டது. நாலாம் படிவம் படித்துக்கொண்டிருந்தான். சுமார் ஐந்தடி உயரம் இருப்பான். எப்போதும் குறு குறுப்புடன் விளங்கும் கண்கள். மிகவும் நற்குணம் உடைய பையன்; கெட்டிக்காரன். வாத்தியார்களுக்கும் சக மாணவர்களுக்கும் ஸ்ரீதரைக் கண்டால் அலாதிப் பிரியம்.

ஸ்ரீதரின் தந்தைக்குக் கப்பலில் காப்டன் உத்தியோகம். ஆகையால் அவர் அடிக்கடி கப்பலில் போய்விடுவார். அப்போதெல்லாம் ஸ்ரீதரும் அவன் தாயாரும் தனியாக இருப்பார்கள். ஸ்ரீதரின் தாத்தா சோலைவனம் என்ற கிராமத்தில் இருந்தார். அவர் ஒரு மாஜி ஜமீன்தார். சோலைவனம் பெயருக்கேற்ப மிகுந்த வளப்பமும் அழகுடனும் விளங்கியது. அந்தக் கிராமத்திற்குத்தான் ஸ்ரீதர் கிறிஸ்துமஸ் விடுமுறையைக் கழிக்கச் சென்றுகொண்டிருந்தான்.

மறுநாள் காலை ஸ்ரீதர் தன் பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தான். சுமார் ஏழரை மணிக்குக் காரில் ஏறிக்கொண்டு ஸ்டேஷனுக்குக் கிளம்பினான். அவனை வழியனுப்ப அவன் பெற்றோர் கூடச் சென்றிருந்தார்கள்.

துணை ஒருவரும் இல்லாமல் தன்னந்தனியாகப் பிரயாணம் செய்வது ஸ்ரீதருக்கு முற்றிலும் ஒரு புதிய அனுபவம். கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தாத்தா, பாட்டியைப் பார்க்கப் போகிறோம் என்ற எண்ணம் அவனுக்கு உற்சாகத்தை அளித்தது. சோலைவனம் சென்னையிலிருந்து சுமார் முன்னூறு மைல் இருக்கும். போகும் வழியெல்லாம் இயற்கைக் காட்சிகளின் எழிலைக் கண்டு வியந்த வண்ணம் இருந்தான்.

மாலை நான்கு மணிக்கெல்லாம் சோலைவனம் வந்துவிட்டது. சூட்கேஸுடன் ஸ்ரீதர் கீழே இறங்கினான். பத்துப் போர்ட்டர்கள் போல அவனைச் சூழ்ந்துகொண்டு அவன் கையிலிருந்த சூட்கேஸை வாங்க முயற்சித்தனர். ''ஒருவரும் வேண்டாம்'' என்று கூறிவிட்டு அவன் நேராக நடந்தான். இதற்கு முன்பு மூன்று வருடத்திற்குமுன் சோலைவனத்திற்கு ஸ்ரீதர் வந்திருக்கிறான். அப்பொழுது அவனுடைய அப்பாவும் அம்மாவும் வந்திருந்தனர். தாத்தாவின் வீடுதான் கிராமத்திலேயே பெரியது. அதனால் வீட்டைக் கண்டுபிடிப்பது சுலபம். ஜமீன்தார் மாளிகை எது என்று கேட்டால், கிராமத்தார் சிவப்பு வர்ணம் பூசப்பட்டிருந்த பெரிய கல் கட்டடத்தைச் சுட்டிக் காண்பிப்பார்கள். அவருடைய தயாளகுணம் சோலைவனம் முழுவதும் பிரசித்தம். அவரைக் கண்டால் மக்கள் ஒரு பெரிய கும்பிடு போடுவார்கள். இதெல்லாம் ஸ்ரீதருக்கு நன்றாகத் தெரியும். அவன் அந்தச் சிவப்பு மாளிகையை நோக்கி நடக்கலானான்.

## 3. ஜமீன்தார் மாளிகை

ஸ்ரீதர் மாளிகைக்குள் நுழைந்ததும், தாத்தாவும் பாட்டியும் அவசரம் அவசரமாக அருகில் வந்து, ''வாடா குழந்தை, வா!'' என்று கூறி, அன்போடு அவனை அணைத்துக்கொண்டார்கள்.

ஸ்ரீதர் பிறகு நீராடிவிட்டு சாப்பாட்டுக் கூடத்திற்கு வந்தான். சமையற்காரன் தயாரித்த தோசைகளில் மூன்றை உள்ளே தள்ளி

விட்டு, அவன் நந்தவனத்தைப் பார்க்கச் சென்ருன்.

நந்தவனம் மிகவும் அழகாக இருந்தது. மா, பலா, வாழை கொய்யா, ஆரஞ்சு, சபோடா, சீதா முதலிய பழ மரங்களும் நிழலுக்காகத் தூங்கு மூஞ்சி மரம், கொன்றைமரம், அரச மரம், வேப்பமரம் முதலியவை களும் இருந்தன. அதைத் தவிர ரோஜா, மல்லி, சம்பங்கி, நித்திய மல்லி, முல்லை, கனகாம்பரம், சண்பகம், இருவாட்சி முதலிய புஷ்பச் செடிகளும் ஏராளமாக இருந்தன. ஆங்காங்கே மரகதப் பாய் விரித்ததுபோல் பச்சைப் புல் வளர்ந்திருந்தது. முன் பக்கத் தில் ஒரு தாமரைக் குளம் இருந்தது. அதில் தாமரையும், அல்லியும் அலர்ந்து இருந்தன. பார்க்குகளையும் புஷ்பக் கண்காட்சி களையும்விட இந்தத்தோட்டம் அழ காக இருக்கிறது என்று மனத்திற் குள் நினைத்துக்கொண்டான் ஸ்ரீதர்.

பிறகு தாத்தாவிடம் வந்து, ''தாத்தா, நான் இங்கு வந்து மூன்று வருடம் ஆகிறது. நான் போனதடவை இந்த மாளிகையை முழுக்கப் பார்க்கவில்லை. இந்தத் தரம் காண்பிக்கிறீர்களா!'' என்று ஆவலுடன் கேட்டான் ஸ்ரீதர். ''சரி கண்ணு, இங்கே முருகன்னு ஒரு வேலைக்காரன் இருக்கான். நீ அவன்கூடப் போ. உனக்கு எல்லா வற்றையும் காண்பிப்பான்!'' என்று கூறினுர்.

ஸ்ரீதருக்கு எடுத்த எடுப்பிலேயே முருகனைப் பிடிக்கவில்லை. முப்பது வருஷமாக அவன் தாத்தாவிடம் வேலை செய்கிருனும். தாத்தாவுக்கு அவனிடம் அபார நம்பிக்கை. ஸ்ரீதரோ முருகனைப் பார்க்கும் போதெல்லாம், ''பழம் பெருச் சாளி'' என்று முணுமுணுப்பான். தாத்தா அவனோடு தன்னைப் போகச்சொல்கிருரே என்று எண் ணியபடி முருகனை வெறுப்புடன் பின்தொடர்ந்தான்.



முருகன் ஸ்ரீதரை ஒவ்வோர் இடத்திற்கும் அழைத்துச் சென்ருன். "இது பெண்கள் இருக்குமிடம்; இது மாளிகையின் முற்றம்; இது சபாமண்டம், இது பொக்கிஷச் சாலே, இது ஆயுதசாலே, இது ஆடரங்கம், இவை குளிக்கும் அறைகள், இது வாசகசாலே, இது சித்திரமண்டபம்" என்று மாளிகையின் எல்லா இடங்களேயும் காண்பித்து முடித்தான்.

ஸ்ரீதர் சாப்பிட்டுவிட்டு அவனுக்காகக் கொடுக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்ருன். அங்கே விலேயுயர்ந்த ரத்தினக்கம்பளங்கள் விரிக்கப்பட் டிருந்தன. ஒரு பெரிய கட்டிலின்மேல் ஒரு வெல்வெட் மெத்தை, இரு வெல்வெட் தலேயணைகள் இருந்தன. அறை விசாலமாகவும் காற்ருேட்டமாகவும் இருந்தது. கட்டிலில் படுத்து சுகமாகத் தூங்கிஞன் ஸ்ரீதர்.

## 4. வாசகசாலே

மறுநாள் மத்தியான்னம் சாப்பிட்ட பிறகு ஏதாவது புத்தகம் படிக்கலாமென ஸ்ரீதர் நினேத்தான். அவனே கதைப் புத்தகங்கள் கொண்டுவரவில்லே. மாளிகையில்தான் வாசகசாலே இருக்கிறதே, அங்கேயே படிக்கலாம் என்று நினேத்துக் கிளம்பிஞன்.

ஒரு பெரிய கூடத்தில் வாசகசாலே அமைக்கப்பட் டிருந்தது. அங்கே சித்திர வேலேப்பாடுகளுடன் கூடிய பன்னிரண்டு பீரோக்கள் இருந்தன. அவைகளில் கணிதம், சிற்பம், சித்திரம், சங்கிதம், விஞ்ஞானம், பூகோளம், சரித்திரம், நடனம், இலக்கணம், ஜோதிஷம், வானநூலாராய்ச்சி முதலிய பல கலேகளில் தமிழ், ஸம்ஸ்கிருதம், ஆங்கில நூல்கள் இடம்பெற்றிருந்தன. இவைகளேத் தவிர மேனுட்டு இலக்கியங்களும் நம் நாட்டு இலக்கியங்களும் நிறைந்திருந்தன. உட்கார்ந்து படிப்பதற்கு வசதியாக ஒரு நீண்ட மேஜையும் சுமார் இருபது நாற்காலிகளும் இருந்தன. அவ்வளவு பெரிய அறையில் ஒருவனே உட்கார்ந்திருப்பது பொருத்தமற்றதாகக் காணப்பட்டது. ஸ்ரீதர் தனக்கு வேண்டிய புத்தகங்களே எடுத்துக்கொண்டு படிக்க உட்கார்ந்தான்.

இரண்டு மணி நேரத்தில் எடுத்த மூன்று புத்தகங்களேயும் படித்து முடித்தான். சோலேவனம் கிராமத்தைச் சுமார் இருநூறு ஆண்டுகளுக்குமுன் அரசாண்ட தனது மூதாதையரை நினேத்துக் கொண்டான் ஸ்ரீதர். இவ்வளவு அருமையான வாசகசாலேயை ஏற்படுத்திக் கல்வியை மதித்த முன்னேர்களே நினேத்துப் பெருமைப் பட்டான். இத்தகைய சிந்தனேகளில் மூழ்கியிருந்தவன் கடகட வென்ற ஓசை கேட்டு, தனது சிந்தனேகளிலிருந்து விடுபட்டு இவ்வுலகிற்கு வந்தான்.

ஸ்ரீதர் சட்டென்று திரும்பி நாலாபுறமும் தனது பார்வையைச் செலுத்திஞன். சத்தம் தனக்குப் பின்புறமிருந்து வருவதாக அவனுக்குத் தோன்றியது. பின்னுல் திரும்பிஞன். பீரோவில் ஒரு புத்தகம் தானுகவே கடகடவென்று ஆடியது. ஸ்ரீதரின் குடல் நடுங்கியது. பழங்கால வீடுகளில் முனீசுவரன் இருக்கும் என்பார்களே, அது உண்மையோ என்னவோ? உடலெல்லாம் அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. ஏதோ அசட்டுத் தைரியத்துடன் பீரோவைத் திறந்தான். புத்தகம் கீழே விழுந்து அதிலிருந்து ஓர் எலி விழுந்தடித்துக்கொண்டு ஓடியது. தான் ஓர் எலிக்குப் பயந்தது குறித்து ஸ்ரீதர் வெட்கிஞன். புத்தகத்தை உள்ளே வைக்க அதைக் கையிலெடுத்தான்.

புத்தகத்தின்மீது 'சோலேவனம் மாளிகையின் சுரங்கப் பாதை' என்று இருந்தது. அடங்காத ஆவலுடன் ஸ்ரீதர் அதைப் பிரித்தான். மாளிகையின் உள்ளேயிருக்கும் சுரங்கப் பாதையைப்பற்றிப் பல விஷயங்கள் அங்கே எழுதப்பட்டிருந்தன. ஸ்ரீதர் அதைப் படிக்க முடிவு செய்து, அதை எடுத்துக் கொண்டு பீரோவைப் பூட்டிஞன்.

## 5. மாளிகையின் ரகசியம்

ஸ்ரீதர் தனது அறைக்குள் நுழைந்ததும் முதலில் புத்தகத்



தைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான். அவன் படித்தது இதுதான்:

''ஸ்ரீதருடைய தாத்தா ஜமீன்தாருடைய தாத்தாவுக்குத் தாத்தாவினுடைய காலத்தில்தான் இந்தச் சிவப்பு மாளிகை கட்டப்பட்டது. பலவித மர்மங்களுடனும் நிலவறைகளுடனும் மாளிகை அமைக்கப்பட்டது. அந்தக் காலத்தில் அவர்கள் பெரிய ஜமீன்தார்களாக - ஏன் குட்டி ராஜாக்களாக இருந்தனர் என்றே கூறலாம். வெள்ளையர் வந்தபின்பு அவர்கள் சுதந்தரம் இழந்து வெறும் செல்வத்துடன் பெயரளவில் ஜமீன்தார்களாக வாழ்ந்தனர்.

''அப்பொழுது சோலைவனத்தின் செல்வச் செழிப்பைக் கேள்வியுற்று, சில கொள்ளைக்காரர்கள் ஜமீனைக் கொள்ளையிட வந்தனர். கொள்ளையடித்துக்கொண்டு ஓடிய கள்ளர்களை ஜமீன் ஆட்கள் பிடித்தனர். ஆனால் அவர்களிடம் கொள்ளையிட்ட பொருள்கள் அகப்படவில்லை. அதனால்/ திருடர்கள் தாங்கள் திருடவில்லை என்று கூறித் தப்பிச் சென்றனர். பின்னர் பொருள்கள் அகப்படவேயில்லை.

சிலகாலம் கழித்து நமக்குச் சுதந்தரம் கிடைத்தது. ஜமீன்கள் ஒழிக்கப்பட்டன. ஜமீன்தார்களுடைய சொத்து அரசாங்கத்திற்குச் சேர்ந்தது. அதன்படி ஸ்ரீதர் தாத்தா மாஜி ஜமீன்தாரானார். அவருடைய சொத்து இருக்குமிடம் தெரியவில்லை. அதைக் கண்டுபிடிக்க அரசாங்கம் பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருந்தது.

அந்தப் புத்தகத்தில் மாளிகையிலிருக்கும் சுரங்கப் பாதையைப் பற்றிய குறிப்புகள் இருந்தன. மாளிகையில் எங்கேயோ ஓரிடத்தில் சுவரில் சதுரமான மரப் பலகை இருக்கிறது. அதன் நடுவிலுள்ள குமிழை மும்முறை திருகினால் ஒரு சுரங்கப்பாதை உண்டாகும். அதன் வழியாக நிலவறையைக் காணலாம்.''

இவையெல்லாம் ஒன்றுவிடாமல் படித்துவந்த ஸ்ரீதர் இந்தச் சுரங்கப் பாதையை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டான். 'இதை ஒருவரிடமும் சொல்லக்கூடாது. தாத்தா, பாட்டி இருவருக்கும் இது தெரிந்தால் எங்கேயாவது மாட்டிக்கொள்ளாதே என்று தடுப்பார்கள்' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். பிறகு வாசகசாலைக்குச் சென்று புத்தகத்தைப் பீரோவில் வைத்து மூடினான்.

## 6. அறை எங்கே?

ஸ்ரீதர் மறுநாளே சுரங்கப் பாதையைத் தேடும் படலத்தை ஆரம்பித்தான். முதலில் தோட்டத்திற்குச் சென்று சுவரில் எங்கேயாவது மரப்பலகை இருக்கிறதா என்று கவனித்தான். ஒவ்வோர் இடத்தையும் மிக உன்னிப்பாகக் கவனித்துத் தேடினான்.

அப்பொழுது யாரோ பேசும் சத்தம் கேட்டது. ஸ்ரீதர் ஒரு பெரிய இருவாட்சிச் செடி மறைவில் ஒளிந்துகொண்டு அவர்கள் பேசுவதைக் கவனித்தான்.

''சுப்பா, நான் வேலை முடிச்சிட்டேன். பட்டணத்திலேருந்து வந்திருக்கும் பொடியன்தான் நம்ம

வேலைக்குக் குந்தகமாக இருக்கு'' என்றது ஒரு கட்டைக் குரல்.

''அந்தக் கிழங்கள் இருக்கே, அதுகளுக்கு ஒரு வழி வச்சாகணுமே!'' என்று ஒரு கம்மல் குரல்.

''அது சுலபம். இன்னிக்கு நாலாம் நாள் இந்தச் சிவப்பு மாளிகை, அந்தக் கிழங்கள், பொடிப் பயல் எல்லாம் நெருப்பிலே வெந்து பிடி சாம்பலாகிவிடுவார்கள். அப்புறம் துட்டோடு நாம் கம்பி நீட்டலாம்'' இது முதல் குரல்.

''ஆகா! சரி, இந்த ஜமீன் சொத்து மதிப்பு எவ்வளவு இருக்கும்?'' இது இரண்டாம் குரல்.

''சொத்தா, சுமார் ஐம்பது லட்சம் இருக்கும்.''

''அதை எங்கே பதுக்கி வச்சிருக்காங்க?''

அதற்குமேல் பேசியது ஸ்ரீதர் காதில் விழவில்லை. மெதுவாகச் செடி மறைவிலிருந்து வெளியே வந்தான். இரு கறுப்புத்துணி போர்த்த உருவங்கள் வெளியே போய்க்கொண்டிருந்தன. அவன் கேட்ட விஷயங்கள் அவன் உடலை நடுங்கச் செய்தன. குப்பென்று வியர்த்துக் கொட்டியது. இருந்தாலும் தைரியத்தைக் கைவிடாமல் முதலில் சுரங்கப் பாதையைக் கண்டு, உள்ளேயிருக்கும் பொருள்களை எடுத்து, கறுப்பு உருவங்களைப் பிடிக்கவேண்டும். இல்லாவிடில், தனக்கும், பாட்டி தாத்தாவுக்கும் ஆயுள் மூன்று நாட்கள்தான்.

பிறகு மாளிகைக்குள்ளே வாசகசாலை, பொக்கிஷசாலை, ஆயுதசாலை, சமையல்கட்டு, தாழ்வரம், சபாமண்டபம், மற்ற அறைகள் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் தேடினான். சில அறைகளில் மரப் பலகைகள் இருந்தன. ஆனால் அவற்றில் குமிழ்கள் இல்லை. ஆத்திரம் ஆத்திரமாக வந்தது ஸ்ரீதருக்கு.



## 7. சுரங்கப் பாதை

திடீரென அவனுக்கு ஒரு யோசனை பளிச்சிட்டது. எல்லா அறைகளையும் பார்த்தாகிவிட்டது. தன்னுடைய அறையை அவன் பார்க்கவே இல்லையே! பரபரப்புடன் தன் அறைக்குச் சென்ற வேகத்தில் எதிரே வந்த வேலையாள் முருகன் மீது மோதினான். முருகன், ''சின்ன எசமான், ரொம்ப அவசரமா இருக்கீங்க போலிருக்கு!'' என்று கூறி, பல்லை 'ஹிஹிஹீ' என்று இளித்தான். ஏற்கனவே விகாரமான அவன் முகம் சிரித்தபோது இன்னும் கோரமாகியது. ஸ்ரீதர் அவனைச் சுட்டெரிப்பது போல் பார்த்துவிட்டுப் போனான்.

அறைக்குச் சென்று தன்னுடைய அறைக் கதவுகளையும் ஜன்னல்களையும் மூடினான். நான்கு புறமும் சுவரைக் கவனித்தான். அவன் எதிர்பார்த்தது



போலவே ஒரு மரப் பலகையில் ஒரு குமிழ் இருந்தது. அதை மும்முறை திருகினான். மரப் பலகை நகர்ந்தது. பிளவு உண்டாயிற்று. ஆறு அடி உயரமும் மூன்றடி அகலமும் உடைய துவாரமாக அது இருந்தது.

அந்தச் சுரங்கப் பாதை அவன் நினைத்த படி இருட்டாக இல்லாமல் வெளிச்சமாக இருந்தது. இவன் உள்பக்கம் வந்தவுடன் பலகை தானாகவே மூடிக்கொண்டது. ஸ்ரீதர் நேராகச் சென்றுகொண்டிருந்தான். ஓர் இடத்தில் வளைந்து மறுபடியும் நேராகப் போனான். பாதை கரடுமுரடாக இல்லாமல் ஒழுங்காக இருந்தது. சற்றுத் தூரம் கழித்து ஒரு படிக்கட்டுத் தோன்றியது. கீழே படிக்கட்டில் இறங்கினான். அங்கே ஏதோ சத்தம் கேட்டுப் படிக்கட்டின் வளைவில் மறைந்துகொண்டு உற்று நோக்கினான். ஒரு மனித உருவம் தோன்றியது. அது முன்பு தோட்டத்தில் பார்த்த அதே கறுப்பு உருவம்தான். ஸ்ரீதர் பயந்து படிக்கட்டில் இறங்கலானான். படிக்கட்டு ஒரு நிலவறைக்குள் அவனைக் கொண்டு சென்றது. அங்கே நல்ல காற்றோட்டமும் மங்கலான வெளிச்சமும் இருந்தது. அவன் தடவித் தடவி அறையின் மூலைக்கு வந்து சேர்ந்தான். அங்கே ஏதோ பளபளவென்று மின்னுகிறதே! அது என்ன?'

## 8. சிதறிய வைரங்கள்

ஆம். அவை கண்ணைக் கூசும் வைரங்கள். அவைகளை எடுக்க ஸ்ரீதர் கையை நீட்டித் துழாவினான். வைரங்கள் சிதறிக் கீழே விழுந்தன. ஸ்ரீதருக்குக் கள்ளர்கள் கொள்ளையடித்த பொருள்களை இங்கேதான் விட்டுச் சென்றிருக்க வேண்டும் என்று தோன்றியது. மேலே சென்று தாத்தாவிடம் விஷயத்தைக் கூற வேண்டும் என்று நினைத்துப் படிக்கட்டில் ஏறினான். அங்கே யாரோ வருவதுபோல் தோன்றியது.

வேறு வேஷம் போட்டுக் கொள்ள நினைத்து ஸ்ரீதர் தனது ஷர்ட்டைக் கழற்றி முண்டாசு போல் கண்களைப் பாதி மறைத்துக் கட்டிக் கொண்டான். தனது கைக்குட்டையை எடுத்து கண்களுக்குக் கீழே முகமூடிபோல் கட்டிக்கொண்டான். இப்பொழுது அவனைப் பார்த்தால் பட்டிக்காட்டான் போலிருந்தது. பிறகு தைரியமாக மேலே சென்று மரப்பலகையைத் திறக்க முயற்சித்தான். அங்கே ஒருவரையும் காணவில்லை. பலகையைத் திறக்க முடியவில்லை. வருத்தத்துடன் கீழே அமர்ந்தான்.

சிறுது நேரத்தில் கறுப்பு உடையணிந்த உருவம் வந்து கடூரமான குரலில், ''யார் நீ?'' என்று அதட்டிக் கேட்டது. ஸ்ரீதர் குரலை மாற்றிக்கொண்டு, ''அண்ணாச்சி, நாம ரெண்டு பேரும் ஒரே தொழில் காரங்கதானே! நீங்க கீழே போவலையா? அங்கே, அம்மாடி! எவ்வளவு வைரம் இருக்கு! நாம ரெண்டு

பேரும் பங்கு போட்டுக்கலாம். இந்தக் கதவை எனக்குத் தொறந்திட்டீங்கன்னா உங்களுக்குக் கீழே போக வழி சொல்லுவேன். நான் இங்கே காவலிருப்பேன். நீங்க வைரத்தைக் கொண்டாரலாம்'' என்று குழைவாகக் கூறினான். வைரத்தை அடையும் ஆசையுடன் கதவைத் தனது முழு பலத்துடன் நெம்பித் திறந்தான் அந்த மனிதன். ஸ்ரீதர் அவன் காதோடு குசுகுசுவென்று ஏதோ வாயில் வந்த தப்பு வழியைக் கூறினான்.

கறுப்பு மனிதன் அப்பால் சென்றவுடன் ஸ்ரீதர் வெளியே வந்து மரப்பலகையை மூடி குமிழைத் திருகினான். அந்த மனிதன் உள்ளே அடைபட்டுக் கிடந்தான்.

## 9, போலீஸ் வந்தது.

ஸ்ரீதர் தனது வேஷத்தை மாற்றிக் கொண்டான். போலீஸுக்குத் தகவல் தெரிவிக்க எண்ணி போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினான்.

பத்து நிமிஷத்தில் போலீஸ் லாரி பன்னிரண்டு கான்ஸ்டபிள்கள் சகிதம் வந்தது. ஸ்ரீதர் அவர்களைச் சுரங்க வழியாக நிலவறைக்குள் அழைத்துச் சென்றான். கறுப்பு மனிதன் அகப்பட்டுக்கொண்டான். அவனது கறுப்பு ஆடை களையப்பட்டது. உள்ளேயிருந்த மனிதன் உண்டவீட்டுக்கு இரண்டகம் விளைவித்த வஞ்சகத் துரோகி முருகன் தான்! ஸ்ரீதர் ஆச்சரியப்பட்டான்.

முருகன் ஜமீன்தாரின் முன்பாக நிறுத்தப்பட்டான். அவர் ''ஐயோ, இன்ஸ்பெக்டர் ஸார்! முருகன் முப்பது வருஷமா இங்கே வேலை பார்க்கறான், ஸார்! அவன் நல்லவன்'' என்று கதறினார்.

இன்ஸ்பெக்டர், ''ரொம்ப நல்லவன்! இருபது வருஷத்திற்கு முன்பு திருடர்கள் வந்தார்களே, அவர்களுடைய கையாள் முருகன். இவன் தான் திருடர்களுக்கு உளவு சொல்லி இங்கே திருட வரச்சொல்லியிருக்கிறான். அதிருஷ்டவசமாகத் திருடர்கள் மாட்டிக்கொண்டனர். நகைகளையும் மற்றப் பொருள்களையும் பதுக்கிவிட்டனர். முருகனே ஒருவேளை ஜமீன்தாருக்கு உளவு கூறிவிட்டானோ என்று சந்தேகப்பட்டுத் திருடர்கள் இவனுக்கு நகைகள் இருந்த இடத்தைச் சொல்லாமல் தப்பிச் சென்றனர். நகைகளுக்காக இவன் அரண்மனையில் தேடாத இடமில்லை. சுரங்கப் பாதையிலும் தேடியிருக்கிறான். தேடிய பொருள் இவன் கண்ணில் படாமல் நம் ஸ்ரீதர் கண்ணில் பட்டிருக்கிறது. சாமர்த்தியமாக நகைகளைக் கண்டுபிடித்துத் திருடனையும் பிடித்துக் கொடுத்து விட்டான்'' என்று கூறினார்.

''ஆ! அப்படியா?'' என்று தாத்தா வாயைப் பிளந்தார். பிறகு இன்ஸ்பெக்டரைப் பார்த்து, ''ஸார், உங்களுக்கு இதெல்லாம் எப்படித் தெரிந்தது?'' என்று தாத்தா கேட்டார். ''கொஞ்சம் ஸ்ரீதர் சொன்னான். கொஞ்சம் முருகனை மிரட்டிக் கேட்டுத் தெரிந்துகொண்டேன்'' என்று அவர் பதிலளித்தார்.

பிறகு ஸ்ரீதர் ஆதியோடந்தமாக எல்லாவற்றையும் தாத்தா, பாட்டியிடம் கூறினான். தாத்தா அவனைக் கட்டியணைத்தார். பாட்டி திருஷ்டி சுற்றிப்போட்டாள். மாஜி ஜமீன்தாரின் சொத்துக்களில் சிறிது தவிர பெரும் பாகம் அரசாங்கத்தைச் சேர்ந்தது. மறுநாள் எல்லாப் பத்திரிகைகளிலேயும் ஸ்ரீதரின் புகைப்படமும் தீரன், வீரன், சூரன் என்ற புகழுரைகளும் பிரசுரமாகியிருந்தன. அவன் அப்பாவும் அம்மாவும்கூட சோலைவனம் வந்து மகனுடன் விடுமுறையைச் சந்தோஷமாகக் கழித்தனர்.

ஜனவரி மாதம் பதினெட்டாந் தேதி ஸ்ரீதர் சென்னை வந்த பொழுது அவனை அவன் நண்பர்கள் மாலை போட்டு ஒரு கவர்னரை வரவேற்பதுபோல் வரவேற்றனர். ''என்னதான் இருந்தாலும் ஸ்ரீதர் ஒரு ஜீனியஸ்டா!'' என்று புகழ்ந்தான் மணி.

''ஆமாம்டா!'' என்றனர் நண்பர்கள்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

211815

# கண்ணன் கிளைக் கழகம்

ஐயம்பேட்டை (தஞ்சை ஜில்லா)

உபதலைவர்கள்: பி. சீனிவாசன்
கே. ராமபத்ரன்
செயலாளர்: ரா. பிச்சை
பொருளாளர்: ஆர். கிருஷ்ணமூர்த்தி

ஐந்து பேர்கள் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ...ஜி' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது வாசக...யும் விளையாட்டுக் கிளப்பும் அமைக்கப்பட விருக்கின்றன. செய... C/o டி. எஸ். வேங்கடேசன், நடுத்தெரு, ஐயம்பேட்டை, ...தூர் போஸ்டு, தஞ்சை ஜில்லா என்ற விலாசத்துக்குக் கதைகள் ...பலாம்.

...ணப்பாரை

உபதலைவர்கள்: இ. முகம்மது அலி
அப்துல் மஜீத்
பொருளாளர்: துரை. பெருமாள்
செயலாளர்: வி. பாலகிருஷ்ணன்

...ன்னிரண்டு பேர்கள் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்...ளது. அரங்க ராசகோபாலனை ஆசிரியராகக் கொண்டு 'தேன் ...ன்ற கையெழுத்துப் பத்திரிகை (மாதம் இருமுறை) நடத்தப்... விலாசம்: செயலாளர், மாணவர் மன்றம், நான்காம் ...க. உ. பள்ளி, மணப்பாரை.

...ள்ளிக்குளம்

உபதலைவர்கள்: களிகைதராசு
டி. முத்து
செயலாளர்: தாசன்
பொருளாளர்: மரியான்

...ந்து பேர்கள் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ... மன்றம் என்னும் வாசகசாலையும் 'தமிழோசை' என்ற ...யெழுத்துப் பத்திரிகையும் நடத்தப்படுகின்றன. கதைகள் அனுப்பும் ...ரி: களிகை தராசு, 10/25 கள்ளிக்குளம், திருநெல்வேலி ஜில்லா.

...கோட்டாறு

உபதலைவர்: ஆ. சௌந்திரராஜன்
செயலாளர்கள்: நாராயணன்
இரா. துரைராஜ்
பொருளாளர்: ஆ. கோபாலன்

...பத்துப் பேர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. தங்க...து அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'முரசு' என்ற மாதாந்தரக் ...யெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. கதைகள், ஆ. லட்சு...ன், 7/21, டெயிலர் தெரு, கம்பளம், கோட்டாறு, கன்னியாகுமரி ...லா என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

## பேனா நண்பர்கள்

1. என். ஹரிஹரன், 4, சர்தார் தெரு, உடுமலைப்பேட்டை.
2. எஸ். புருஷோத்தமன், 119. வேங்கடரங்கம்பிள்ளைத் தெரு, ...ல்லிக்கேணி, சென்னை-5.
3. ஜெ. சுந்தரம், 6. மோட்டுக் காளவாய்த் தெரு, மல்லிகை ...பாலக்கரை, திருச்சி-1.
4. ஆர். ஞானசபாபதி, 106, சத்திரம் தெரு, தூத்துக்குடி.
5. வெ. சீனிவாசன், 22, நடுத்தெரு, கே. சோழங்கநல்லூர், ...சி-3.

(Regd as a Newspaper in Ceylon) Regd. No. M. 8



# கண்ணன்

## வெளியீடுகள்

| | | | ரூ. ந. |
|---|---|---|---|
| 1. | தங்க மாம்பழம் | ராஜி | 2 |
| 2. | லீடர் மணி | ஆர்வி | 1 |
| 3. | சைனு சு-சூ | ஆர்வி | 1 |
| 4. | ஜிம்மி | பெ. தூரன் | |
| 5. | சந்திரகிரிக் கோட்டை | ஜனு | 1 |
| 6. | அசட்டுப் பிச்சு | ஆர்வி | 1 |
| 7. | மஞ்சள் பங்களா | ஜி. ஜயராமன் | |
| 8. | சின்ன ராஜா | வாசகன் | |
| 9. | பவழவல்லி | கி. ரா. | |
| 10. | கவிஞர் கதை | கி. வா. ஜ. | |
| 11. | விளையும் பயிர் | கி. வா. ஜ. | |
| 12. | சமர்த்து மைனு | தி. ஜ. ர. | |
| 13. | அபாயச் சங்கு | நீலம் | |
| 14. | ஜக்கு | ஆாவி | |
| 15. | ஜம்பு | ஆர்வி | 0 |
| 16. | ஏரிக்கரை மாளிகை | ஜனு | 0 |
| 17. | மின்னல் அரக்கன் | ஜனு | 0 |
| 18. | ராஜாவும் குருவியும் | சோமசன்மா | 0· |
| 19. | கழுகும் கிளியும் | சோமசன்மா | 0·5 |
| 20. | தவளையும் காளையும் | சோமசன்மா | 0· |
| 21. | விஞ்ஞானம் பேசுகிறுர் | பெ. நா. அ. | 0·5 |
| 22. | பாரஸீக ரோஜா | ஆர்வி: ஸாமி | 0·5 |
| 23. | புலிக் குட்டி | ஆர்வி: ஸாமி | 0·4 |
| 24. | தூங்கும் அழகி | ஆர்வி: ஸாமி | 0·2 |
| 25. | குளிகைத் தீவு | ஆர்வி: சங்கர் | 0·2 |
| 26. | மாஸ்டர் பாலகுமார் | ஆர்வி: ஸாமி | 0·2 |
| 27. | நீச்சல் பழக்கம் | டிமான்ஸ்டிரேட்டர் | 0·2 |
| 28. | பார்வதியும் ஏழு சித்திரக்குள்ளர்களும் | எஸ். ஜே. | 0· |
| 29. | கோழி விதைத்த நெல் | சூடாமணி | 0· |
| 30. | தங்கத்தின் பந்து | சூடாமணி | 0· |
| 31. | என் பேர் என்ன? | சூடாமணி | 0· |

சந்தாதார்களுக்குக் கமிஷன் உண்டு

ஐந்து வயது முதல் பதினறு வயது வரையில் உள்ள களுக்காகப் பல அழகான கண்ணன் வெளியீடுகள் இ

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை**